26 MAR 1906

“ எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்பதறிவு ”

பூலோகவியாசன்.

பிரதி யதாமும் பிரசுரஞ் செய்யப்படும்.

தொகுதி 3.] சென்னை 1905௵ டிசம்பர்௴ 10௳ [பகுதி 3.

“ வேண்டுதல் வேண் டாமை யிலானடி சேர்ந்தார்க்
கியாண்டு மிடும்பை யில ”

தயவுசெய்து இதைப் படிக்கவேண்டாம்.

பத்திரிகாம்சங்கள் பத்தொன்பது.

1 நமது பத்திரிகை வெகு குறைந்த சந்தாவுக்கு அனுப்பப்படுவதால் அன்பர்கள் சந்தாவை நிறுத்தாமல் அனுப்பிவிடவேண்டும்.

2. இதைவாங்கும் அன்பர்கள் தாங்களாவது படிக்கவேண்டும், தமது பிள்ளைகளையாவது, ஏனையமுக்கியமானவர்களையாவது படிக்கச்செய்யவேண்டுமல்லது, பத்திரிகை வாங்குகின்றோம் என்னும் கவரதைக்காக எமக்குப் பணங்கொடுத்து வாங்கி மூலையில் வைத்திருக்கக் கூடாது என்பது விண்ணப்பம்.

3. பல பத்திரிகைகள் தோன்றி சிலகாலத்தில் மறைந்துபோனதற்குக் காரணம் கையொப்பக் காரர்களேயன்றி பத்திராதிபர்களல்லர். சிலரும் அவ்வாறுஉண்டு. நமதுபத்திரிகை பகவானுடைய அனுக்கிரகத்தால் மூன்று வருடமாக நிலைபெற்றது. இனியும் நன்கு நடக்க முயல்வது கையொப்ப நேயர்களாலேயே என்பது நன்கு விளங்குவதால், அன்பர்கள் தத்தம் கையொப்பங்களைச் செலுத்திவிடுவார்களெனக் கோருகின்றோம்.

4. கடந்தவருடமாகிய இரண்டாவது வருட சந்தாவை யீதுமட்டும் செலுத்தாத அன்பர்கள் 5. பேர்தான். அவர்கள் நாமதேயத்தை அடுத்த பத்திரிகையில் வெளியிடுவாம். 5. கேவலம் ஒருரூபாயைப் பெரிதுபாராட்டி ஒருவருஷத்திற்கு மேலும் வைத்திருப்பது விசனம். மற்றநாட்களில் மறந்திருந்தாலும், பத்திரிகை வாங்கின அன்றைக்காவது ஞாபகம்வாராதா ?

6. நாம் தாக்ஷிணைக்கனுப்பினாலும், காகிதம் வருவதெப்படி ? அச்சுக்கூலி யாவதெப்படி ? ஸ்டாம்புசெலவு எப்படி ? கவனிப்பார்களாக. பத்திரிகை பெற விரும்பாதார் செலுத்தவேண்டிய சந்தாவைச் செலுத்திவிட்டு நிறுத்துவது நலமல்லவா ? நாமே நிறுத்திவிடுவது நன்மையையும் மரியாதையையும் காட்டுமா ? 7. கடந்தவருடங்களிலும் அன்பாளரானசீமான்கள்இவ்வருடம் அதிகமாக் வாங்குகிறார்கள்.

8. பத்திரிகை வேண்டாமென்று எழுதி தெரிவித்து நிறுத்திவிடும் அன்பர்கள் உத்தமர்களே. எனினும் பாக்கியைவைத்துக்கொண்டு அவ்வாறு செய்வோர்யார்? 9.ஜனன, மரண அறிக்கைகள் 3 வரிக்கு அதிகமாகஎழுதி

னால் 4 அணா கட்டணம் செலுத்தவேண்டும், பாடலாக எழுதினால் 8 அணா கட்டவேண்டும்.

10: பதில்பெற விரும்புவோர் ரிப்ளைகார்டு அல்லது தபால் தலையனுப்ப வேண்டும்: காரணம் வெகுகுறைந்த சந்தாவா யிருப்பதே. நன்கொடையாளரான அன்பர்களுக்கு அவ்விதங்கிடையாது. 11. கட்பெயிட் காகிதங்கள் திருப்பிவிடப்படுவதோடு, பிரசுரிக்காத கடிதங்கள் திருப்பியனுப்பப் படமாட்டாது 12. கடிதமெழுதுவோர் தமது உண்மைப்பெயருடன் எழுதவேண்டியது. கள்ளத்தனமாகபோலியர்களைப் போன்று வீண் பெயரிட்டெழுதினால் என்னவாகும்? 13. பத்துகையொப்பங்கள்சேகரித்து வசூல் செய்தனுப்பும் அன்பர்களுக்கு ஒரு டைம்பீஸ் இனாமளிக்கப் படும்.

14. மூன்றாவது வருடசந்தா செலுத்தும் அன்பர்களின் நாமதேயங்களை அடுத்த பத்திரிகையில் வெளியிடப்படும். இப்பத்திரிகை நிலைபெற்றோங்க கடவுள் கிருபையுடன் கையொப்பநேயர்களும் தயவு பாராட்டவேண்டும். எவ்வளவெழுதினாலும் படித்ததும் மறந்து சந்தாசெலுத்தாமல் மௌனஞ்சாதிப்பவர்கள்கவனிப்பார்களாக. 15. பத்திராதிபர் துட்டுவிஷயத்தில் இவ்வளவெழுதினார், ஆகையால், இவர் பத்திரிகையை நிறுத்திவிடவேண்டுமென்று அன்பாளர் ஒருபோதும் எண்ணாது சந்தாவை அனுப்பிவைப்பது உத்தமமாகும்.

16. சிலமேதாவிகளுக்கு நமது பத்திரிகையை இலவசமாக அனுப்புவதேன்? அன்னவர்கள்வேறுசில கையொப்பம்சேர்த்து ஆதரிப்பார்களென்றே. அதைக் கவனியாது வருகிற பத்திரிகைகளைப்பெற்று படித்தெரிவதற்கல்ல என்பது எண்ணம். 17. அதுபோல் ஒவ்வொரு கையொப்ப நேயர்களும் வேறுசில கையொப்ப நேயர்களைச் சேகரிக்க வேண்டுகின்றனம். பத்—ர்.

சித்தாந்தப்பிரகாசம்.

(31-ம்-பக்கத்தொடர்ச்சி)

கன்மத்தின்வழி நற்சாதி வாழ்நாள் புசிப்பான முறைமையுடையதென்னும்படி மூன்றுவிதமாம். இங்ஙனம் வருமூன்றும் ஒரான்மாவிலே கூடிப் போதுகிறது பழையதாகவிருக்கும். அதுதான் முறையிலன்றிப் புசிக்கலாகாதாயினும் ஆர்ச்சித்தமுறையிலே கூடாமல் வன்மை மென்மைகட்கீடாக மாறிக்கூடும், இயல்பாகிய ஆதிதைவிக முதலாக ஆதிபவுதிகம் ஆத்தியான்மிகமான கூறுபாட்டாற் பொருந்துகின்ற அசேதன சேதனங்களாலும் சுகதுக்கமாய்ப் பொருந்தும். இப்படி நன்மைதீமைகளைச் செய்துவருகிற ஆன்மாவுக்கு இவ்விடத்துப் புசிப்பை விசாரித்துப்பார்க்கில் அந்தக்கன்மங்களைப் புசிக்குமுறைமையிலே மேலுஞ் சனனமுண்டாகைக்குக் கன்மமுண்டாகாநிற்கும். தெய்வத்தால்தருவது தைவிகம், பூதத்தால்வருவது பவுதிகம், ஆன்மாக்களால் வருவதான்மிகம், இவற்றுள் ஆன்மிகம் இருவிதம். அவை சரீரகமும், மானசமுமெனவாம். சாரீரகமாவது குன்மங்காசமுதலான வியாதிகளால் வருவது. மானசமாவது சோகம் ஆசூயை மாற்சரியங்களால்வருவது.

முன்பு நானார்ச்சித்த கன்மம் இப்போதுபுசித்துவிடுவதாயிருக்க மேலுமொரு செனனமுண்டாகைக்கு வருகின்றவினை எந்த வினைதானென்றுகேட்கில், புசிக்கும் அவசரத்திலுண்டான இதாகிதங்களால் வரும் வினையாகும். அங்ஙனம் இதாகிதத்தாலுண்டான சகலவினைகளும் முன்புள்ள புண்ணிய பாவங்களின் தொடர்ச்சியாமெனின் நாமென்னு மமதைத்தானே மேலு

மொருபிறப்புண்டாகைக்கு முதிர்ந்த அதன்பயனுகிய கன்மம் உண்டாகும்.
அபுத்திபூர்வமான கன்மமும் புத்திபூர்வமான கன்மமுமெனவொரு கன்மாந்
தமே இரண்டாய்ப் பிரபஞ்சத்திலே செய்து போகின்ற கன்மங்களெல்லாம்
இரண்டுவகையாம். அங்ஙனமாமிடத்திற் பொருந்தத்தான் இதமும் அகித
முமாகாநிற்கும். இந்தவிதாகிதத்தாலே தப்பாமற் புண்ணியகன்மம் பாவகன்
மமென்று பொருந்தும்.

அந்தப் புண்ணியபாவங்களான இரண்டு வினைகளும் மெய்மனமொழிக
ளான முப்பொறிகளிற் பொருந்திய தொழிலும் நினைவும் உரையுமான இம்
மூன்றினுலே வருவனவாம். ஒருவினையால் ஒருவினைபோகாது. விசாரித்துப்
பார்க்கில் புசிப்புத்தவராது. அவ்விருவினைகளுள் ஒருவினையால் ஒருவினைக்கு
விடுதலையும் வேதாகமங்கள் சொல்லும். ஒழிதலெங்ஙனமெனில் அவைசொன்
னமுறையிலே செய்தாற் கூடினபாவகன்மநீங்கும் இங்ஙனம் புண்ணியத்தாற்
பாவமொழிகைவிலக்குக்கொள்ளுமுறையை யுடையதுமாம். இப்படிச்சாந்தி
பண்ணுதிருப்பினும் அபுத்தி பூர்வமாகப் பாவமொழிகைக்கேற்ற புண்ணிய
மும்சித்திக்கும். ஆனல் இந்தமுறையேபாவமடங்கலையும்போக்கிவிடலாமோ
வெனில் இறைவன் முற்காலத்திலே அருளிச்செய்த வேதாகமங்களின்முறை
மையிலேசெய்தால் மிகுத்த கன்மங்கள்போம். அவ்விடத்துப்போகாத கன்
மம் புசிப்பிக்கவேண்டுகையாலே மேலைக்குச் சம்பந்தமாம். இன்னும் திட்ட
கன்மம் அதிட்டகன்மம் அநியதகன்மமென மூவிதமாம். திட்டகன்மமாவது
அவுடதபிரயோகத்தாலும் அரசராலும் பகைவராலே ஆபிசாரமாகப் பிர
யோகிக்கப்பட்ட மந்திரங்களாலும் இம்மையிற்பலிப்பது. அதிட்டகன்மமா
வது சுவர்க்க நரகங்களிலே அனுபவிக்கப்படுவன. அநியதகன்மமாவது அசு
வமேதமும் பிரமகத்தியு மொருகாலத்திற் செய்யப்பட்டுப் பக்குவம் வந்த
விடத்தே ஒருங்கேயிரண்டும் புசிக்கப்படாமையிற்கருத்தா இன்னகாலத்தில்
இதுவென்றறுத்திப்புசிப்பிக்குமது. இனிமூன்றும்பத்தி திட்டா திட்டம்.
அதாவது ஒருவன் இம்மையிற்செய்த அசுவமேதப்பலன் இம்மையிலேபலிப்
பது என்பதுமொன்று. கன்மங்கள் மாலையிலேபொருந்திப்பக்குவப்பட்டுச்
சிருட்டித்தகாலத்திலே புசிக்கப்படும்.

சூக்குமை வாக்கானது முன்சொன்ன சுத்தமாயாகாரியமானவிந்து சத்
தியிலேநின்றும் விளக்கமாய் ஆன்மசொரூபத்தின் இயல்பேதுவாகத்துரியத்
திற்செல்லும் நாதம் பைசந்தி வாக்கானது அந்த நாதத்திலே தோன்றிச்
சுழுத்தித்தானத்தைப் பொருந்தி வெவ்வேறாய் அக்கரங்கடோன்றுகின்ற
முறைமை தெரியாமற்றன் னுள்ளேயொடுங்கி மயில்முட்டையிற் சலமொப்பா
ய்ச் சித்தத்திலே அறிவாய்நிற்கும். மத்திமை வாக்கானது பிராணவாயுவுடனே
பொருந்தி வருகின்ற அவ்வக்கரங்கள்பொருந்திய சொரூபங்களெல்லாவற்
றையும் அவற்றின்பொருள்களையும் புத்தியிலே ஒழுங்குபடநிறுத்தி ஞானேந்
திரியங்களின் முற்பட்டுவருஞ் செவிக்குக்கேளாமல் உள்ளே அறியத்தக்க
தொனியாய்கண்டத்திலே முழங்காநிற்கும். வைகரிவாக்கானது உதானவாயு
வானது சுழுமுனையிற்சேரும் பிராணவாயுவோடு கூடுதலாலேவந்த சத்தமா
னது சொல்வோன் செவியிடத்திலே பொருந்தும்படி அவனினைந்த பொரு
ளைச்சொல்லும். இந்த முறைமையிலே சொல்லப்பட்ட நாலுவாக்கினுலே
சுத்தவித்தை முதலான தானங்களிலே யிருக்குமைவராலே ஆன்மாக்கள்
அறிவுக்கீடாக முதல்வனருளினுலே கேடாதே விளங்காநின்றஞானம் ஆவ்வு
யிர்க்குப்பொருந்துமென்று சொல்லப்படும். அஃதெங்ஙனமெனின் நாதத
துவம் மூலாதாரத்தையும், விந்து நாபியையும், சாதாக்கியம் இதயத்தையும்

அதிட்டித்துச் சூக்குமைமுதலான மூன்றையும் பிரேரிக்கும் ஈசுரமும் சுத்த வித்தையும் தன்செவி பிறர்செவிகட்குக்கேட்கும்வைகரி இருவிதத்தையுங் கண்டத்தையு முகத்தையும் அதிட்டித்துக்கொண்டு பிரேரிக்கும் அசுத்தமாயையினுண்டாகிய கலையானது ஆணவமலத்தைச் சற்றே நீங்கி ஆன்மாவுக்குக் கிரியாசத்தி பொருந்துமுறைமையை விளக்குவிக்கும். வித்தையானது இந்திரியங்களின் விடயங்களைப் புத்திகிருகித்துத் தன்பாற்கொடுக்க தான் ஞானத்துக்கும் புத்திக்கும் இடையேநின்று விடயஞானத்தைஆன்மாபொருந்தியறியும்படி அவ்வான்மாவுக்கு அந்தரங்கமாகப் பொருந்தும். இவைதாமாகச்செய்யவல்லனவோவெனின் சுத்தனுடைய சத்தியைக் கூடிநின்றேசெய்யும். கலைவித்தையினும் ஆன்மாவுக்கந்தரங்கமான கருவியாகலிற்போகங்களுக்காதாரமாயிருக்கும், மட்குடம் அக்கினியிற் காய்ச்சினபோது மெழுகுகூட்டுகைக்கு யோக்கியமானாற்போல ஆன்மாவும் கலையைப் பொருந்தினபோது போகங்களைப்புசிக்கைக்குப் பாத்திரமாம். கலையாலே கிரியாசத்திவிளங்கவே ஞானசத்தியும் விளங்குமாயினும், அந்தஞானசத்தியொருகாரணங் கூடாமல் விடயங்களுக் கிரங்கமாட்டாமையாலே விடயங்களையறிவது பொருட்டாகக் கலையினின்றும் வித்தைதோன்றிற்று. ஆன்மா இந்திரியங்களைப் பொருந்திச் சத்தாதிவிடயங்களையறியுமிடத்து(கிருகிக்குமிடத்துப்)புத்திக்கருவிபுத்தியிற் பொருந்திய விடயங்களை யறியுமிடத்துவித்தைகருவியாகும்,

இன்னும்வரும். சித்தாந்தசரபம்.

திருக்குறள் நடுவுநிலைமை.

பகைவர், அந்நியர், சிநேகிதராகிய ரிடத்து, அறத்தினின்றும் வழுவாமல் அன்னோரிடத்து சமமாய் நிற்கும் நிலைமை இது செய்ந்நன்றி யறிதலென்னு மதிகாரத்திற் கடுத்த அதிகாரமாக அமைக்கப்பட்டதற்கு காரணம் சற்று நிதானித்தால் தெளிவாய் விளங்கும் - தனக்கு நன்றிசெய்த மேற் சொல்லிய மூவரும் ஓர் கால் விலக்குகளிலேதேனும் செய்ய நேரிட்டு; தான் அவர்களைக் கண்டிக்க நேர்ந்தவிடத்து அவர்கள் செய்துள்ள நன்றி அச்சமயத்து, தான் உணர்ந்தால்தான் அறத்தினின்று வழுவி நடுநிலைமை தவறுவன். ஆகையால் இம்மாதிரியான சமயங்களிலுங் கூட நடுநிலைமை தவறுப்படாதென்பதை நமக்கு எச்சரிக்க இவ்வதிகாரம் செய்ந் நன்றியின் பின் அமைக்கப்பட்டது. நடுவுநிலைமையின் சிறப்பு இத்தன்மைத் தெனக் காட்ட "தகுதியென வொன்று நன்றே பகுதியாற், பாற்பட் டொழுகப் பெறின்" என்றார். இங்குதகுதியென்பது நடுவுநிலைமை எனக்காட்டி அஃது ஒன்று (ஒருதர்மம்) எனக் காட்டினர். எல்லா இதரதர்மங்களும் உள்ளவனேனும் நடுவுநிலைமை யில்லாதவனாயிருந்தால் அத்தர்மங்களெல்லாம் அபலமாகுமென்பதைக் குறிப்பாகக் காட்ட இங்கு தகுதி (தகுந்தது) என்றும் ஒன்று (சிறப்புற்றது) என்றுங் கூறினர். இத்தகைய சிறப்புவாய்ந்த தர்மம் மற்ற நற்குணங்களால் சிறப்பாகக் கொள்ளப்படுவரிடத்தும் சிற்சிலவிடத்து இல்லாமலிருக்கும் என்பதைக் காட்ட "பெறின்" என்று முடித்தார். அவ்வளவு அரியதர்மத்தை பெற்றுக்கொள்வதுதான் ஒருவரைப் பெரியவராக்கும் என்பதை "செயற்கரிய செய்வர் பெரியர் சிறியர், செயற்கரிய செய்கலாதார்" என முன்னமே நாயனார் கூறியிருக்கின்றார். இதனைப்பெற முயலவேண்டும் என்பதும் இக்குறளின் குறிப்பாகவுமிருக்கும். நடுவுநிலைமையுடையவனாயிருந்தால் இவ்வுலகத்தில் செல்வவந்தனாவது அசாத்திய

மென்னும் தப்புகொள்கையை மறுக்க "செப்ப முடையவ னுக்கஞ் சிதைவின்றி, யெச்சத்திற் கேமாப் புடைத்து" என்றார் நடுநிலைமையை யுடையவன் சம்பாதித்த பொருள்கெடாது அவன் சந்ததிக்கும் உதவுமென்பது இக்குறளின் கருத்தாம். செல்வமானது "எல்லில் கருங்கொண்மூ வாய்திறந்த மன்னுபோற், றேன்றி மருங்கறக் கெட்டுவிடும்" என்பது தனியாயினும்நடுவுநிலைமையாற்சம்பாதித்தன அழியாததாய்தானிறக்குந்துணையுமிருந்துபிறகுதன் சந்ததிக்கு முதவுமாகையால் இவ்வற நெறியால் பொருள்சம்பாதிக்கவேண்டும். இதனை நாயனர் "அருளொடு மன்போடும் வாராப் பொருளாக்கம், புல்லார் புரளவிடல்" என்பதாலும், சீவகசிந்தாமணி "செய்கபொருள் யாருஞ்செறுவாரை செறுகிற்கு மெஃகு பிறிதில்லை யிருந்தேயுயிரையுண்ணு, மையமில்லை யின்பமறனேடெவையுமாக்கும், பொய்யில் பொருளேபெர்ருள்மற் றல்ல பிறபொருளே" என்பதனில் பொய்யில் பொருள் என்னும் விசேடத்தானும் மற்ற கூற்றாலும் நன்கறியலாம். நடுவுநிலைமையுள்ளவன் செல்வம் அழியாதென்பதைக் காட்டி அஃதில்லாதவன் அழியுமென்பதை விரிக்க "நன்றே தரினுநடுவிகந்தா மாக்கத்தை,யன்றேயொழியவிடல்" என்றார். அதாவது நடுவுநிலைமையில்லாமையால் வந்தசெல்வம் நன்மைதராது அப்படி ஓர்கால் அப்போதைக்கு மாத்திரம் நன்மைபயப்பதுபோலிருந்தாலும் அதை விட்டுவிடல் வேண்டுமென்பது இக்குறளின்பொருளாகும். இதிலுள்ள உம் எதிர்மறைப் பொருளதாய் நன்மைபயக்காதெனக்காட்டும் ஒருவர் நடுவுநிலைமை யுடையவர், அல்லது இல்லாதவர் என்பதை அவர்களது பிள்ளைகளால் தெரிந்து கொள்ளலாமென்பதைக் காட்ட "தக்கார் தகவில ரென்ப தவரவ ரெச்சத்தாற் காணப் படும்" என்றார். நல்லபிள்ளையை யுடையவர் நடுவுநிலைமையையுடையவர் என்றும் கெட்டப்பிள்ளைகளைப் பெற்றோர் நடுவுநிலைமை யில்லாதவர்களென்றும் காட்டப்பட்டது - இதனை மனுதர்ம சாத்திரம் மூன்றும் அத்தியாயத்தில் சொல்லியதாலும் "மகனறிவுக்குந்தந்தைநலத்தை" என்னும்காகனர்கூற்றானும் "செந்நெல்லாயசெழுமுளைமற்றுமச், செந்நெல்லே யாகி விளைதலா-லந்நெல் வயனிறைய காய்க்கும் வளவயலூரமகனறிவுதந்தையறிவு" என்னும்நாலடியாலும்நன்கறியலாம். பின்னும் வினைக்குத் தக்கபடி கேடும் பெருக்கமும்உண்டாதலாலும் தாம்என்னசெய்யினும் இதை மாற்றமுடியாதாகையாலும் ஆகவேதாம் ஒருவர்க்காவது தனக்காவது அப்போதைய நன்மையைவேண்டி நடுவுநிலைமை தவறினும் தம் எண்ணப்படி ஆகாது என்பதை அறிந்த பெரியோர் நடுவுநிலைமை தவறமாட்டார் என்பதைக் காட்ட "கேடும் பெருக்கமு மில்லல்ல நெஞ்சத்து, கோடாமை சான்றோர்க் கணி" என்றார். வினை, கேடுபெருக்க மிவற்றிற்கு காரணமென்றுணராத சிறியோர் நடுவுநிலைமை தவறி வீண்பெருமையையும் கெட்டவழியால்வந்த பொருளையுமே ஆபரணமாகக் கொள்வர் என்பது இதன்குறிப்பாகும். கெடுவான் கேடு நினைப்பான் என்பதையொக்க, கெடுவான் நடுநிலைமை தவறுகிறான் என்றுகாட்ட "கெடுவல் யானென்ப தறிகதன் னெஞ்ச, நடுவொரீ இயல்ல செயின்" என்றார். ஒருவன் நடுநிலை தவற நினைக்கும்போதே அவனது நெஞ்சம் அவனுக்கு கேடுவரும் என்று முன்னதாக அறிவிக்கின்றது. அப்படியும் தள்ளி செய்வானேயானல் கெடுவான் என்பது நிச்சயம். இஃதுதான் கெட்டுபோக "பந்தயம்போட்டு கெட்டு போகிறன்" என்பதை யொக்கும். "யதார்த்தவாதி வெகுஜன விரோதி" என்னும் பழமொழிக்கிணங்க நடுவுநிலைமையுடைய ஒருவன் மற்றவர்களால் விரோதிக்கப்பட்டு வறுமையடைந்த நாலும் அதை வறுமையாக பெரியோர்

கவனிக்கமாட்டாரென்று "கெடுவாக வையா துலக நடுவாக, நன்றிக்கட் டங்கியான் றாழ்வு" என்பதால் கூறியிருக்கின்றார். அவ்வளவு தாழ்வையும் பெரியோர் செல்வமாகக் கொள்ளுகின்றார்கள். ஏனெனில் அவ்வறுமை வெகு சீக்கிரம் நீங்கி பிறகு நீடித்த செல்வராயிருப்பர். இதனை "சீருடைச் செல்வர் சிறுதுனி மாரி, வறங்கூர்ந் தனைய துடைத்து" என்னுங்குறளாலறியலாம். பெரியோர்கள் என்னவறுமையடைந்த காலத்தும் பட்சபாதமாக ஒன்றும் செய்யார் என்பது இதன் குறிப்பர்த்தமாகும். இதனை திரிகடுகம் "......பால்பற்றி சொல்லா விடுதலும்......தூஉய மென்பார் தொழில்" என்பதனாலறியலாம்.

பின்னும் நடுநிலைமை யுடையோரை உபமானத்தால் சிறப்பிக்க "சமன் செய்து சீர் தூக்குங் கோல்போ லமைந்தொருபாற், கோடாமை சான்றோர்க் கணி" என்றார் இங்கு எப்படி தாரசுகோல் பொருளுக்கேற்க குறைவு அதிகம் சமமிவைகளைத் தாரதம்மியமின்றி காட்டி விடுகின்றதோ அப்படியே பெரியோரும் பட்சபாதமில்லாமல் பகைவர் அந்நியர் சிநேகர் என்றுங் கருதாது ஆட்சேப சமாதானங்களாற் கேட்டு ஊழான் உள்ளவாறுணர்ந்த வற்றை மறையாது ஒப்பக் கூறி அவ்வாறுணர்ந்தறிவர். இதனையேபெரியோர் ஆபரணமாகக் கொள்வர். இதைப்போலவே இவ்வதிகாரம் 5 - வது குறள் கூறுகின்றது. சிலர் சொல்லால் மாத்திரம் பட்சபாத மற்றவராகக் காட்டிக் கொண்டாலும் மனத்தில் நடுவுநிலைமை யற்றவராயிருந்தால் பயனில்லை யெனக் காட்ட "சொற்கோட்ட மில்லது செப்ப மொருதலையா, வுட்கோட்ட மின்மை பெறின்" என்றார். ஏனெனில் அநேகர் மேலுக்கு நீதியுள்ளவர்களாகக் காண்பித்து உள்ளுக்கு ஒரு பட்சமுள்ளவர்களாக இருக்கின்றார்கள். இவர் உலகத்தை மயக்கும்வஞ்சகர் என அறிக இவ்வித நடக்கையையே தொழிலாலக் கொண்டு அநேகர் ஜீவனஞ் செய்கின்றனர். இவர்கள் தெரிந்தும் குற்றம் செய்கிறவர்களானபடியால் தண்டனை அதிகமென்றறிந்து பிழைக்கும் வழிதேடிக்கொள்ளக் கடவர். கடைசியாக பெருப லாபத்தையே கருதி அதிகமாகபெற்று குறைவாகக் கொடுப்பதே வர்த்தகத்திற்கு அழகும் லாபத்தைத் தரக்கூடியதென்றும் நம்பும்போலிவர்த்தகரை எச்சரித்து புத்திமதி கூறுவான் பொருட்டு "வாணிகஞ் செய்வார்க்கு வாணிகம் பேணிப்பிறவுந் தமபோற் செயின்" என்றார். வர்த்தகத்திலேயே இப்படி செய்யப்படாதென்றால் மற்ற காரியங்களிற் செய்வது மகாகேவலத்தையும் இழிவையும் உண்டாக்குமென்று எச்சரிக்கின்றார்.

1. தகுதியெனவொன்று நன்றே பகுதியாற்
   பாற்பட் டொழுகப் பெறின்.

2. செப்பமுடையவ னாக்கஞ் சிதைவின்றி
   யெச்சத்திற் கேமாப் புடைத்து.

3. நன்றே தரினு நடுவிகந்தா மாக்கத்தை
   யன்றே யொழிய விடல்.

4. தக்கார் தகவில ரென்ப தவரவ
   ரெச்சத்தாற் காணப் படும்.

5. கேடும் பெருக்கமு மில்லல்ல நெஞ்சத்துக்
   கோடாமை சான்றோர்க் கணி.

6. கெடுவல்யா னென்ப தறிகதன் னெஞ்ச
நடுவொரீஇ யல்ல செயின்.

7. கெடுவாக வையா துலக நடுவாக
நன்றிக்கட் டங்கியான் றாழ்வு.

8. சமன்செய்து சீர்தூக்குங் கோல்போ லமைந்தொருபாற்
கோடாமை சான்றோர்க் கணி.

9. சொற்கோட்ட மில்லது செப்ப மொருதலையா
வுட்கோட்ட மின்மை பெறின்.

10. வாணிகஞ் செய்வார்க்கு வாணிகம் பேணிப்
பிறவுந் தமபோற் செயின்.

கோ. மு. சென்னை.

இலஞ்சம்வாங்குதல்.

பரிதானம்:—இந்நாட்டில் ஒரு அடாதகுற்றம் விர்த்தியாகி வருவதை நாம் நாள்தோறும் பார்க்கப் பார்க்க, கேட்கக் கேட்க மனம் பதைக்கின்றது. அஃதி யாதெனில், இலஞ்சம் அல்லது பரிதானம் என்ற, கைக்கூலி வாங்குதலேயாம். இக்குற்றஞ் சொற்பசம்பளம் வாங்குவோரிடத்தில் மாத்திரமல்ல நூற்றுக்கணக்காய்ச் சம்பளம் பெறுவோரிடத்திலும் நடந்து வருகிறதென்பதை அறியாதவர் யார்? இலஞ்சம் அல்லது பரிதானம் என்பது அடைந்திருக்கும் மரியாதையான நாமம் வருமானமென்பதாம். ஒரு சினேகிதன் அல்லது இனத்தான் தன் சினேகிதனை அல்லது இனத்தானை நெடுநாட்சென்று காணில், முந்த அவன் சுகத்தையும் அவனைச் சேர்ந்தோர் சுகத்தையும் விசாரித்து, பிறகு அவன் உத்தியோகத்தையும் பெறுஞ் சம்பளத்தையுங் கேட்டு, இதைச் சேர்ந்தாப்போல வேறொரு விநோதமான கேள்விபோடுவார். நமது நண்பர் தவறாது சொல்வாரென நம்பலாம், அதென்னவெனில், “உமக்கு வருமான மேதேனுமுண்டா” அல்லது “உமக்கு மாதாந்தம் எவ்வளவு வருமானம்வரும்” என்பதுதானே. இது மிகவும் வெட்கத்தையுண்டாக்குங் கேள்வியன்றோ.—எமது துரைத்தனத்தார் இத்தேசத்தில் நடக்கும் ஒவ்வொரு குற்றத்திற்கும் தண்டனை விதித்திருப்பதுபோல இக்குற்றத்திற்கும் விதித்திருக்கின்றன ரென்பதுமெய்யே. ஆகிலும் இதுவிஷயத்தில் செய்யப்பட்டிருக்கும் ஏற்பாடு பரிதானம் வாங்குவதை நிறுத்துவதாயிராமல் நாளொருவண்ணம் விர்த்திப் பிக்கிறதாயிருக்கிறதென்று தோன்றுகிறது. எப்படியென்றால், இவ்வேற்பாட்டின்படி பரிதானம் வாங்குகிறவனும் தண்டிக்கப்படுகிறான். அப்படியே கொடுக்கிறவனும் தண்டிக்கப்படுகிறான். பரிதானங்கொடுப்பவன் தானும் தண்டனைக்குள்ளாகதபடிக்கு, தான்செய்த இக்குற்றத்தை வெளியிடானென்கிற நம்பிக்கையினாலேயே அநேக உத்தியோகஸ்தர் பயமின்றி, இக்கொடிய தீவினையைச் செய்து ஞாயத்தைப்புரட்டத் துணிகின்றாரென்பது வாஸ்தவம். பெரும்பாலும் பரிதானம் பலவந்தமாய் வாங்கப்படுகிறதால், இது கொள்ளைக்குச் சமானமென்னலாம். ஆகையால்கொள்ளையடித்தவனைத் தண்டிக்கிறதுமன்றி, கொள்ளை கொடுத்தவனையும் தண்டிப்பது ஞாயமா? “கோழியுங் கொடுத்துக் குரலுமிழக்கவேண்டுமா” ஒருவன் தான் லஞ்சங்கட்டியும் தான்நினைத்தகாரியம் கைகூடாதேபோனால் “உப்புக்கண்டம் பறிகொடுத்த பார்ப்பினிபோல” வாயை மூடிக்கொண்டிருக்க வேண்டியதாகவிருக்கிறது. நமது

துரைத்தனத்தார் பரிதானம் வாங்குவோர்களை மாத்திரம் தண்டிப்பதென்று இன்று நிரூபிப்பார்களாகில் ஒன்றில் பரிதானம் வாங்குதலே அற்றுப்போம். அல்லது பரிதானம் வாங்குவோர்களெல்லாம் வெளிக்குக் கொண்டுவரப்படுவார்கள். இப்படிச்செய்யத் தாமதிப்பார்களாகில் அநியாயம்மிகுந்து துரைத்தனங்குலைந்து தேசமழிவதற்கிடமாகும். ஒரு தேசத்தில் லஞ்சம்வாங்குகிறவர்களுக்குங் கடுந்தண்டனை விதிக்கப்பட்டது. அது யாதெனில் லஞ்சம் வாங்கினனென்று ஒருவனைப்பற்றி திருஷ்டாந்தமாய் ரூபிக்கப்பட்டபின் அவன்தோலையுரித்து நியாயாதிபதி உட்காரும் ஆசனத்தின் கீழ் அதைத் தைத்துவிடுவார்கள். அதிபதி அதிலுட்காரும்போது, நியாயத்தைப் புரட்டியும் லஞ்சம் வாங்குவாயானல் முன் அப்படி செய்தவனுக்குகிடைத்த தண்டனையே உனக்கும் கிடைக்கும் என்று எச்சரிக்கப் படுவானும்.

வழியினுலி லஞ்சங் கொண் மாந்தர் பூூற்சென்று
மெலியவர் வழக்கினை விளப்பல் வாடிய
வெளிகண் பார்ச் சாதைதினிடத்து மாக்கள்வெம்
புலியிடத்தினுஞ் சரண் புகுத லொக்குமே.

ஆசையால் வாங்கிடு மவனை யீந்தவர்
ீகசமா மதிப்பராக் கிணன் சென்னிதம்
மாசன மாக்குவரடிமை நானெனச்
சாசனமாவர்க் கவன்றந்த தென்னவே.

பசியினலெளியனோர் பகலிரப்பினும்
அசியுறு மெங்கணு மாக்களுள்ளவர்
நிசிபகல் பலரிட நிதமுமேற் குன்ற
வசை யினைச் சொல்லவோர் வாயும் போதுமோ.

பெற்றவன் கைப்பொருள் பிள்ளைக் கேயலான்
மற்றவர்க்கில்லெயனன் மனுவி னீதியாங்
குற்றமே விடகிதி கோடிபேர் கையிற்
பற்று வோனவர்க் கெலாம் பாலன்போலுமே.

வி. வே. கி. நாராயணசாமிபிள்ளை.

ஜாதிகள்.

இந்துக்களுடைய கற்பனைகளின்படி பிராமணர், சத்திரியர், வைசியர், சூத்திரர் என நான்குபிரிவினைகள் உடைத்தாயிருந்தன. ஆனல் நாளாவில் அநேக பிரிவினைகளாகவும், உட்பிரிவுகளாகவும் பெருகியிருக்கின்றன. பிராமணரில் மாத்திரம். 42. பிரிவுகளுண்டு. அவையாவன:—பாதகண்டம் வட இந்துஸ்தானியென்றும், தென் இநதுஸ்தானியென்றும் இரண்டுகண்டங்களாக பிரிக்கப்பட்டிருக்கின்றன. * இமயமலைமுதல் நருமதை நதிவரைக்கும் வட இந்துஸ்தானியென்றும், நருமதைமுதல் கன்னியாகுமரி இலங்கை யுட்பட தென் இந்துஸ்தானியென்றும் பெயர் வட இந்துஸ்தானியில் வசிக்கிற பிராமணருக்கு பஞ்சகவுடாளென்றும், தென் இந்துஸ்தானியில் வசிக்கும் பிராமணருக்கு பஞ்சதிராவிடாளென்றும் பெயர். இவ்விரண்டு பிரிவுகளில் முளைத்த மூன்று உட்பிரிவினைகளுண்டு அஃதாவன அத்வைதம், விசிஷ்டாத்வைதம், துவைதம்.

இதில் அத்வைதம் ஸ்மார்த்தமென்றுஞ் செல்லப்படுகிறது. இது பிராமணரில் மற்ற சாதிகளைவிட மேன்மையெனக் கருதப்படுகிறது. இது ஸ்தாபிதமாய் சுமார் 4977-வருமாகிறது. விசிஷ்டாத்வைதம் வைஷ்ணவ சமய

மென்றுபெயர். இது ஸ்தாபிதமாய் சுமார் 878-வருஷமாகிறது. த்வைதம் மாத்வபிராமணரென்று பெயர். இது ஸ்தாபிதமாய் சுமார் 691-வருஷமாகின்றது.

இந்த மூன்றுபிரிவுகளில் - 42 - உட்பிரிவுக ளுண்டாயிருக்கின்றன:—ஸ்மார்த்த பிராமணர், வடகலே, திராவிடர்,திராவிடவடமர், திராவிடசோள தேசர், திராவிடதேசர், அர்ச்சகாசாரர், ஆரியரதார், மதிமர், காணியர், மூகாணியர், சாவியர், பரதமசாங்கியர், தெலுங்கர், தெலுங்கானியம், வெலநாட்டிவாரு, முறிகிநாட்டிவாரு, நியோகி, ஆராத்தியர், தேசஸ்தன், கருநடாகன், வேபாரி, நப்பூரி, திராவட வைஷ்ணவாள்,ஆந்திர திராவிடைவைஷ்ணவாள், கோவிந்தபிராமணர், மச்சதேசஸ்தாள், இந்துஸ்தானி, சைனர், சூயன், வடமன், சாங்கேதி, குஜராதி, நம்பியார், திரிபுண்ணிகாள், சூபத்தம்பியார். கீர்த்தியாயனர், பாந்தியாயனர், ஆரியர், பதிதாள்லிங்கிகள், காஞ்ஜி. இப்பிரிவுகளில் பேதமான வழக்கங்களும் சமயாசார சடங்குகளுமுண்டு.

சாமவேத புருஷசூக்தத்திலும், புராணங்களிலும் பிரமாவினுடைய வாயிலிருந்து பிராமணரும், புஜத்திலிருந்து.சத்திரியரும், துடையிலிருந்து வைசியரும்,பாதங்களிலிருந்துசூத்திரரும்வந்தார்களென்றுசொல்லப்படுகின்றது.இது நான்கு சாதிகளுக்குள் உயர்வு,தாழ்வு அந்தஸ்து காட்டவேண்டிஒட்டலங்கார உவமையாய்க் கற்பிக்கப்பட்டிருக்கின்றது. புராணங்களில் பிரஹமாவானவர் ஆண்பிள்ளைகளைச் சிருஷ்டித்த காலத்தில் தானே அவர்கட்கொவ்வொருபெண்களையுஞ் சிருஷ்டித்தாரென்று சொல்லியிருக்கின்றது. பாகவதத்தில் பிரஹமாவானவர் சிருஷ்டிகாலத்தில் தம்மையே இரண்டுகூறுகளாக்கி வலதுபாகத்தை ஆணாகவும் இடதுபாகத்தைப் பெண்ணாகவும் செய்து ஆணுக்கு சுவயம்பு என்றும் பெண்ணுக்கு சதரூபாவென்றும் பெயர்களிட்டார். இவ்விருவரால் அநேக குழந்தைகளுண்டாகி அவர்களில், பிராமணர், சத்தியர், வைசியர், சூத்திரரென நான்குவருணங்களாக வருக்கப்பட்டனவென்று தெரிகிறது.இந்து புத்தகங்களை நன்றாய் வாசித்துணர்ந்த எல்லோருக்கும் இச்சாதி ஏற்பாடு முழுதும் பிராமணருடைய தந்திரங்களென்று தோற்றாமற் போகாது. பிராமணருடைய வல்லமைகளை உயர்த்திக்காட்டும்படியான அவர்களுடைய கனிதத்தையே மேன்மைப் படுததும்படியான, நம்பத் தகுதியற்ற விஸ்தாரமான கட்டுக்கதைகள் எழுதப்பட்டிருக்கின்றன. அவையாவன:—சத்தியயுகங்களில் பிராமணர்களுடைய வாய்களிலிருந்து அக்கினி புறப்பட்டது—

ஒரு பிராமணன் சமுத்திரத்தை விழுங்கிவிட்டான் - பிராமணனிட்ட சாபம் நீங்கமாட்டாது. அரவனென்கிற பிராமணன் வாயிலிருந்து புறப்பட்ட அக்கினியானது ஆயு என்பவன் வமிசத்தையெல்லாம் அழித்துவிட்டது.

(மஹாபாரதம்)

கபிலர் என்கிற பிராமணன் வாயிலிருந்து புறப்பட்ட அக்கினியானது சகரனுடைய புத்திரர்களாகிய அறுபதினாயிரம் நபர்களைப் பஸ்பமாக்கிவிட்டது. (மஹாபாரதம்)

ஜன்னு என்கிற பிராமணன், கங்கையானது சுவர்க்கத்திலிருந்து இறங்கிவரும்போது அதைக்குடித்துவிட்டார். (இராமாயணம்)

அகஸ்திய ரென்கிற பிராமணன் சமுத்திரத்தை அதிலுள்ள பொருள்களோடு விழுங்கிவிட்டார். (மஹாபாரதம்)

தூர்வாசர் என்கிற பிராமணன் தன்னால் செய்யப்படுகிற ஒரு சமயாசாரசடங்கை முடிக்கவேண்டி ஓர் பகற்பொழுதை நீடிக்கச் செய்தான். (மஹாபாரதம்)

பிருகு என்கிற பிராமணன் ஒரு தருணத்தில் பிரம்மா, விஷ்ணு, சிவன், இவர்களிடம் போயிருந்தபோது பிரம்மாவையும், சிவனையும் அபவார்தமொழிகாளால் தூஷித்தான். அவன் காலால் விஷ்ணுவின் மார்பினுதைத்தார்ன். (பத்மபுராணம்)

தொடர்ந்துவரும்.

சி. ம. இ. மூர்த்தி.

தர்பார்.

வெகுகாலத்துக்குமுந்தி அரசர் தங்களிஷ்டப்பிரகாரம் நடந்துக்கொள்ளும் காலத்தில் ஓர் நவாப்பு இருந்தார். அவர் பெருத்த ஸ்ரீமானாகவும்விசாலமானதன்னுடையஇராஜியத்தைவெகுபுத்திசாலித்தனமாகவும்ஆண்டுவந்தார். ஒருநாள் நவாப்பு தன்னுடைய அரண்மனையின் சிங்காரத்தோட்டத்திற்குள் உல்லாசமாக உலவிவரும்போது,அத்தோட்டத்தின் ஓர்மூலையில் ஓர் தோட்டக்காரன் சரீரத்தின்மேல் ஆடையில்லாமல் கௌபீனத்துடன் பெருக்கிக்கொண்டிருக்கஅவனைக்கண்டு தான்எந்நாளும் அப்படி ஆடையில்லாமலிருக்கும் ஆள்களைக் கண்டிலாதவ ராகையால், கடுங்கோபம்கொண்டு "அடே! மடையா அவ்விடம் என்னசெய்கிறாய்'? நீயார்? என்று வினவ, அதற்கு அந்த தோட்டக்காரன் "ஆண்டவரே யான் தங்களுடைய தோட்டக்காரன் தங்களுடைய தோட்டத்தைச் சுத்தப்செய்கிறேன்" என்றான் அதற்கு நவாப்பு "ஏன் நீ போதுமான ஆடையில்லாமலிருக்கிறாய்" என்றார்-அதற்கவன் அடியேனுக்கு தாங்கள் கொடுக்கும் மாதசம்பளம் ரூபாய் ஆறு அது எனக்குப் போதாதபடியால் இம்மாதிரி யிருக்கிறேன்" என்றான். அதெப்படிபோதாது விவரித்து சொல்வாயென,தாங்கள் கொடுக்தும் ஆறுரூபாயில் யான் ஒருரூபாய் கடனாக கொடுத்துவைக்கிறேன், ஒரு ரூபாய் தண்ணியில் போடுகிறேன், ஒருரூபாய் நான் வாங்கிய கடனுக்காக கொடுக்கிறேன், ஒரு ரூபாய் என்னுடைய பகையாளிக்கு கொடுக்கிறேன், மீதி ரூபாய் இரண்டையான் என்னுடைய சொந்தசெலவு செய்துக்கொள்ளுகிறேன். ஆதலால் எனக்கு ஆடைகள் வாங்கப் பணமில்லை என்றான் - அதைக் கேட்டதும் நவாப்புக்கு அதின் பொருள் விளங்காமல் மெத்த கலவரப்பட்டு அவனையே அதின்பொருளைச்சொல்லக்கேட்டுத்தெரிந்துக்கொண்டு உடனே அவனுக்கு 100-வராகனும் சிலஆடைகளும் கொடுத்து இம்மாதிரியாக நடந்ததையாருடனும் சொல்லாமலிருக்கும்படி கட்டளையிட்டு, அப்படி சொன்னால் அவனுடைய சிரசை வெட்டிவிடும்படி உத்தரவு செய்வதாய்ச் சொல்லி சந்தோஷத்துடன் அரண்மனை சேர்ந்தார். மறுநாள் கொலுமண்டபத்தில் வீற்றிருக்கும்போது, தன்னுடைய பிரதான மந்திரியை அழைத்து எனக்கு ஒரு சந்தேக விஷயத்தை விளங்க செய்விக்கவேணும் அந்த சந்தேகம் நிவர்த்தியாகா விட்டால் என் மனதுக்கு சம்மதியிராது. ஆதலாய் நீ அதை ஒரு வாரத்தில் செய்விக்கவேணும் அப்படி செய்யாவிடில் உன்னுடைய சிரசைச் சேதிக்கும்

படி செய்வேன். அந்த சந்தேகமாவது:—“ ஒரு ரூபாய் கடனாகவும். ஒரு ரூபாய் தண்ணியிலும். ஒரு ரூபாய் கடன் வாங்கியதற்காகவும், ஒரு ரூபாய் சத்துருக்கும், இரண்டுரூபாய் தனக்கும் ” என்றால் அதின் பொருள் என்ன என்றார். அதைக்கேட்ட மந்திரி தனக்கு ஒன்றும் தோன்றாமல், அப்படியே எட்டுநாளையில்தங்களுக்குப்பிரதிசொல்லுகிறேனெனவாக்களித்துவீடுபோய் சேர்ந்து மெத்த சிந்தாகிராந்தனாகி விருந்தான்' அதைக்கண்ட மந்திரிமனைவி தன்னுடைய புருஷனிடம்போய் காரணம் விசாரிக்க, அவன் அதைவெளிவிடாமல் சிலநாள் கழித்தான் இப்படி மந்திரி அன்னபானாதிக ளில்லாமல் மெத்தவிசனத்தால் வருந்துவதை அவன் மனைவி சகியாமல்அவனைப்பலாத்காரஞ் செய்து தாம் விசனமாயிருக்கும் காரணம் சொன்னால் நான் அதை நிவர்த்திசெய்வே னென்றாள். பிறகு மந்திரிக்கு கொஞ்சம் தைரியம் வந்து, எழுந்து ஸ்நானம்செய்து, போஜனம் முதலானதுகள் முடிந்தபிறகுதன்மனைவியிடம் தனக்கும் நவாப்புக்கும் நேர்ந்த விஷயங்களைச் சொன்னான். பிறகு அவள் அதை நான்யோசித்து சொல்லுகிறேன், என்றாள் - இது யிப்படியிருக்க, அந்த தோட்டக்காரன் தான் கொண்டுபோன ரூபாய்களினால் தன் மனைவியுடனும் நேசருடனும் சந்தோஷமாக மதுபானங்கள் முதலான விஷயங்களில் சிலவழித்துக்கொண்டு சந்தோஷத்தில் தன்னுடைய மனைவியிடம் தனக்கும், நவாப்புக்கும் நேர்ந்த விஷயங்களைச் சொன்னான். அவள் பெண்பிள்ளையாகையால் அரண்மனையில் அந்தப்புரத்தில்சேடியர்களுக்குநேசமானவளாதலால் மந்திரிவீட்டு அந்தபுர சேடியுடன் தன் கணவனுக்கும் நவாப்புக்கும் நடந்த சவிஸ்தாரங்களைச் சொன்னாள்.

அந்தசேடி அதை மந்திரிபாரியாளுக்குத் தெரிவிக்க, அம்மாது அந்த தோட்டக்காரியை அழைப்பித்து அதினுடையபொருளைச் சொல்லக்கேட்டு அதை மந்திரிக்கு தெரிவித்தாள். மந்திரி தன்னுடைய பிரதிக்கினைப்படிஎட்டாம் நாள் நவாப்பு கொலுமேடைக்குப் போனார். போனதும் நவாப்பினுடைய வுத்திரவுக்கு பதில்சொல்ல சித்தமாக விருக்கின்றாயா? என்று கேழ்க; சித்தமாயிருப்பதாக சொல்லி; “ஒரு ரூபாய் கடனாக கொடுக்கிறேன்” என்றது நான் என்மகனுக்கு கொடுக்கிறேன் என்னும் பொருள். அதாவது அவன் பெரியவனான பிறகு நான்கொடுத்ததைவிட நூறுபங்கு அதிகம் எனக்குத்திருப்பிக் கொடுப்பான். “ஒரு ரூபாய் தண்ணியில் போடுகிறேன்” என்றது நான் என் மகளுக்காக கொடுக்கிறேன். அதாவது அவள் வயுதுக்கு வந்தபிறகு வேறொருவனுடைய பிள்ளைக்கு மனைவியாகி என்னைவிட்டு பிரிந்து விடுகிறாள், அந்த ரூபாய் மருபடியும் திரும்பிவராது.” ஒருரூபாய் நான்வாங்கின கடனுக்காக கொடுக்கிறேன். அதாவது என் தகப்பனுக்கு கொடுக்கிறேன், அவர் என்னை சிறுபோது எனக்குப் பணம்கொடுத்து என்னை ஆள் ஆக்கினவர் ஆலலால் அவருடைய கடனை தீர்க்கத்தான் ஒரு ரூபாய். என்பகையாளிக்கென்றால், அதாவது பெண்சாதிக்கு என்று மந்திரி சொல்லிக்கொண்டிருக்கும்போதே, நவாப்புக்கு கோபம்வந்து இந்த சமாசாரம் அந்த தோட்டக்காரன் மந்திரிக்கு சொல்லியிருக்கவேணும் என்று நினைத்து உடனே அவனை வரவழைக்கச்செய்து அவனை நடந்ததைக்கேழ்கபெண்சாதியால் இது வெளிப்பட்டதென்று செல்லி, நான் முந்தியே பெண்சாதி பகையாளி என்றுசொல்ல வில்லையா? இப்போது என்னுடைய தலைபோகும் புராணம் என் மனைவிதானே என்று சொல்ல நவாப்பு நகைத்து .எல்லோரை கம் போகும்படி உத்திரவு அளித்தார். ஆகையால் நமது வியாசனைக் களிப்யுடன் படிக்கும்.

அன்பர்களே! நாம் உயிர்வழங்கி இல்லறத்தாராயிருக்கும் காலத்தில் செல்வர்க்கழகு செழுங்கிளை தாங்குதல் என்றபடி, நமது சம்பாத்தியத்தில் பிள்ளைக்குக்கொடுப்பது பின்னிட்டு பிரயோசனத்தைத் தருமென்றும், பெண்களுக்குக்கொடுப்பது அபிப்பிரயோஜனத்தைத் தரும்என்றும், தகப்பனுருக்குக் கொடுப்பது கடமையென்றும், அவிவேக மனையாள்களுக்குக் கொடுப்பது தீமையைத் தருமென்றும் நன்குவிளக்குகிறது. எனினும் இச்செய்கை பண்டைகாலத்து ஞானமாகக் காணப்படினும் இக்காலத்தில், பெற்றோரைவருத்தும் ஆண்பிள்ளைகளுக்கும், அன்னவரைக் கனம்பண்ணும் பெண்பிள்ளைகளுக்கும்வருத்தமுண்டுபண்ணுமென்பதுவிளங்குகிறதல்லவா ?

தி. அன்னபூரணியம்மாள்.

கமலாவதி.

37—ம் பக்கத்தொடர்ச்சி.

திரண்டெழுந்த மலைகளைப்போ லிருதோள்களும், யானையினது துதிக்கைபோலும் பலாக்கிரமும் வாய்ந்து முழங்காலைத் தொடும்படி நீண்டகரங்களுடைய அரசரேறே! நமதாக்ஞையின் கீழ் நானிதுவரையிலுங் கவனித்துவந்தவைகளில் கொலைசெய்வதைக் குறித்தேவிசேடநோக்கங்கொண்டேன். இவைதம்முள் தனங்களை யபகரிக்கும் பொருட்டுக் கொலை செய்தவர்கள் இரண்டேபேர்களும் மற்றவர்களெல்லாம் தங்கள் மனையாட்கள் சோரம்போனதினுலவர்களையும் அச்சோர நாயகர்களையும் கொலைசெய்ததாகவு மேற்பட்டு நம்முடைய அரசுரிமைக்கேற்ற வண்ணம் சிட்சை செய்தோ மல்லவா ? இதனைநினைக்க வென்மனமானது ஆறாத்துயரமாகின்றது. என்னஒருவன் தன்மனைவி விபச்சாரியாய்ப் போகவேண்டு மென்று கருதியோ சுபதினம், இராசிப்பொருத்தம், வோரைப் பொருத்தம், இராஜ்ஜ–தபொருத்தம், கோத்திரப் பொருத்தவாதியாகப் பார்த்து அனைவரும் சாட்சியாதற் பொருட்டு பலருக்கு மணவோலை யெழுதி வரவிட்டு, பலவித தானங்கொடுத்து தங்கள்குருக்களால் பலவித அடையாளங்களைக் காட்டி உண்மைசாதித்துமணம் புரிவது ? அந்தோ ! இம்மாதர்கள் செய்யுங் கொடுமை என்னனம் சொல்லித்தீர்வது? இது வோர் போங்கெனினும் சில ஆடவர்களே தங்கள் மனைவியரது சோரத்திற்கு மூலாதாரமா யிருக்கின்றனர். பின்னுஞ் சிலரோ ! தாங்களே மனமுவந்து பரபுருஷருக்குத் தங்கள் மனைவியரை யாட்படுத்துகிறாரெனக் கேள்விப்படுகிறோம். இதுவுமோர் பாலிருக்க அநேக காமச்சண்டாளப்பாமரர் பரஸ்திரீகளைத் தம்மனைவியரைப்போல் நோக்குவ தெங்ஙனம்;

“ பல்லா ரறியப் பறையறைந்து நாட்கேட்டுக்
கல்யாணஞ் செய்து கடிபுக்க—மெல்லியற்
காதன் மனையாளு மில்லாளா வென்றொருவ
னேதின் மனையாளை நோக்கு ”..........அதாவது சுபதினங்கேட்டு பல்லோர்களுமறியப் பறையடித்து மணமுடித்து, மனையாளைத் தனது காவலில் வைத்திருக்க; அயலான் தன்மனையாளைப் போலக்கருதி அவளைப் பார்க்கும் பார்வை என்ன என்பதாம்.

சற்றேனுங் கவனியாது “ காமமே கொலைகட் கெல்லாம் தலைமையாகும்—” என்பதையுமோராது, ஆனால் அவன் பார்த்துவிடப் போகின்றான் என்னும் பலவிதமாய் மனதினை பயங்கரமானது வருத்துவதை யுணர்ந்தும்

பிறர்மனேவியை மனசாக்ஷிக்கு விரோதமாகவே இச்சிக்கின்றான். இவன் பயத்தையே மேற்கொண்டு செல்லுகையி லிவன் தலையிலு ரோமங்களி லொன்று காற்றினற் பறந்து கண்களுக்கெதிராக வருமாயின் யாரோவந்ததாகச் சிந்தித்து, திடுக்கிட்டு பயப்படுகிறான். இதைப்போலு மின்னுமநேக சந்தர்ப்பங்களில் பலவிதமாகப்பயப்பட்டு அப்படியே பிறன்மனையாளை யடையும்போதும்,

" புக்க விடத்தச்சம் போதரும் போதச்சந்
துய்க்கு மிடத்தச்சந் தோன்றுமற்—காப்பச்ச
மெக்காலு மச்சந் தருமா லெவன் கொலோ
அட்கான் பிறனில் புகல்".........அதாவது பிறன்மனையா ளிடத்துப் போகும்போதும்பயம். போய் வரும்போதும் பயம். போனகாலத்திலவளோடு அநுபவிக்கும்போதும் பயம். அக்காலத்தில் யாவரேனும் பார்த்துவிடுகின்றாரோ என்று மப்படிப்பாராமற் காத்துக்கொள்ளவும்பயம். பின்னுமெக்காலத்தும் பயமாகையா லிவ்வளவு பயத்துடனொருவன் பிறன்மனையாளிடத்துப் பிரவேசித்த லென்னபயனுடைத்து என்பதாம். அந்தோ ஒவ்வொருவனும் தினந்தினம பதினைந்து நிமிஷநேரமேனும் இதைக் குறித்து ஆழ்ந்தசிந்தனைக்குக்கொண்டுவருவானாயின் அவன் திரும்பவுஞ் செய்யவேமாட்டானென்று என்மனம் என்னை உசாவுகின்றது.

" அம்ப லயலெடுப்ப வஞ்சித் தமர்மரீஇ
வம்பலன் பெண்மரீஇ மைந்துற்று—நம்பு
நிலைமையி னெஞ்சத்தான் றுப்புரவு பாம்பின்
தலைநக்கி யன்ன துடைத்து."........அதாவது உறவினரும் மற்றவரும் புறங்கூறுவாரெனப் பயந்தும், மயக்கங்கொண்டவனைப் போலபிறன்மனையாளை நம்பித் தழுவும் நிலையில்லாத நெஞ்சத்தான் அநுபவ மானது; விஷச்சர்ப்பத்தின் தலையிலிருக்கும் மாணிக்கத்தை நாவினுல் நக்கியெடுத்து சந்தோஷமடைந்ததுபோலும் என்பதாம்.

இப்படிச்செய்வதினுல் தங்களுக்கேதோ பெருமையுடைத்ததாகவெண்ணி அநேக முழுமகப்பெரியரும் பாவியரும் தங்கள் நேயரிடத்தில்விவகாரங்களைச்சொல்லிக் கொள்வது. இதனைக் கேள்வியுறுதற் பொருட்டே ஏதுமறிந்திலாத பாவியரநேக ரிச்சைகொள்வது, இதின் மூலமாகவே இதில்மகாமகத்துவமுள்ளதென விச்சையை யிதின்பால் செலுத்துகிறார்கள்; என்றால் இதனைப் பேசிக்கொள்பவர்கள் வாயினிக்கப் பேசுவதை நோக்குபவர் கற்கண்டேயெனக் கருதி நாவிலெச்சிலூறுவதுபோல, மனதிலூறப் பெற்றவர்களாய் தாங்களுஞ்செய்ய யத்தனிக்கிறார்கள்.

மாதர்களு மிவ்வண்ணமே. மாதர்களை மற்றவிஷயங்களி லறிந்துகொள்ளும்பொருட்டு இரண்டு மூன்றுமுறை திரும்பத் திரும்பக்கேட்டால் மாறிப்பேசுவதினுலுண்மை வெளிப்படுமேயொழிய இந்த விஷயங்களில் மாத்திரமவர்களை யறிந்துகொள்ளுத லதிசீக்கிரத்தில் கூடாது. என்றால் அவ்வளவு தந்திரமும் சமயோஜித யுக்தியையும் இதன்பால் செலுத்துகின்றார்கள். அவ்வளவு ஒழுக்கங்களையும் அறிவையும் திருப்பி சமுசாரத்திலும் கற்பைக்காப்பதிலும் வைப்பார்களானுல் பெண்கள் சகலஸ்வாதீனங்கட்கும் உரித்தாவார்களன்றோ? மாதர்கள் தங்கள் பேதைமதியைக்கவனியாது, தங்கள் சோர

நாயகரிடத்துச் செல்லுங்கால் யாவரும் நோக்காததையும், தான் சென்று வந்தநேரத்திற்காக ஏற்றதந்திரங்க ளேற்படுத்தி கேட்போர் நம்பும்படியே சொல்லி அப்படி தப்பித்துக் கொள்ளுங்கால் தாம் சொன்னது எவ்வளவு சாதுரியமென்றும் நம்முடைய புத்தி நுட்பமே நுட்பம் என்றும்பலவாறாக மெச்சிக்கொள்ளும் கசடிகள் அவ்வளவு சாதுரியத்தையும் நல்லொழுக்கத்தில்வைத்து மணந்ததினத்து தங்கள் குருக்கள் முன்னம் அவர்கள் காட்டிய பலவித அடையாளங்களின் உண்மைகளை யேற்று தலைகுனித்த மோறை தவறுதநடாத்துவராயின் செல்வரிலும் செல்வத்திலும் தாழ் வடைவேண்டிய காரணமென்னையோ?

ஸ்திரீகள் முன்பின்னறியாமல் ஒருவன் பிணியனுயிருப்பினும் தன்னைப் பராமரிக்குந் திறனில்லாதவனு யிருப்பினுந் தன்கண்கள் திருப்தியாகும்படியான ரூபமும் உடையலங்காரனுமா யிருப்பானே யானுலிச்சையை யவன்பாலுடனே செலுத்தி விடுவது விசேடித்த ஏழ்மைத்தனம். இதன்பொருட்டே மாதர்களுக்கு கல்வி ஆவசிகமானது.

“ குஞ்சி யழகுங் கொடுந்தானைக் கோட்டழகு
மஞ்ச ளழகு மழகல்ல—நெஞ்சத்து
நல்லம்யா மென்னு நடுவு நிலைமையாற்
கல்வி யழகே யழகு. ”...........அதாவது கூந்தலினழகும் பரந்த கரைக்கோட்டினை யுடைய ஆடையினழகும் மணமும் பழுத்த நிறமுமாக வொலித்துக்காட்டு மஞ்சளினழகு மழகல்லவா மானுல் மனதிடத்திலே நடுநிலைமையுடைத்தவளாகி நல்லவளென்று சொல்லச்செய்து வைக்கும் கல்வியினழகே ஒருவளுக்கழகாகும் என்பதாம்.

இதனாலே ஸ்திரீகள் படிக்க கற்றுக்கொள்வதினுல் மாத்திரமல்ல நல்ல நீதிசாத்திரங்களைத் தெரிந்து அதினுலே புத்தியை உசிதப்படுத்த வேண்டுமென்று தெரிகிறது. மாதர்கள் இதனைவிடுத்து தாங்கள் பருவத்தை யடையுமுன்னமே லீலைப்பரிணயத்திற்குரிய விஷயங்கட் கீடுபடுகின்றனர். பருவமடைந்துள மாதர்களும் தங்கள் பெரியோரால் திருமணஞ் செய்து வைக்குமுன் காந்தருவ மணஞ்செய்து கொள்ளுகின்றனர். இப்படிச் செய்துகொள்பவர்களின் ஆனந்தமும் அதற்குமாறாகவுள்ளதுக்கமும்அளவிடத்தக்கதல்ல.

“ ஆழிய கன்புவி யுள்ளன யாவு மடங்கி நள்ளென்
றாழி முடிந்தன வோங்கிருள் யாமத்தும் * * *
* * * * * * *
தோழிநம் மன்னைகண் ணேதுயில் கோட றுறந்தனவே ....”

அதாவது : தோழியே ! கடல்சூழ்ந்த புவியிலுள்ளன யாவுமடங்கி நள்ளென்னுமோசை யோடேகூடி யுகமுடிவுகாலம்போன்றுஇருள் வளரப்பட்டு நடுசாமமாகியும் நம்மன்னையானவள் தூங்காமல் இன்னும் விழித்திருக்கின்றனள் என்பதாம்.

“ * * * * * * * * *
பெண் ணென் பிறவியும் பேருடைத் தன்றிப் பெரும்பதிகங்
கண்ணென் பவர்வரக் கங்குலின் ஞாளிக் கணங்குரைத்துத்
துண்ணென் கடுங்குரல் வாயன்னை துஞ்சினுந் துஞ்சிலவே ”

அதாவது ? பெண்ணென்று சொல்லும் பிறவியுங் கீர்த்தியுடைத்ததாக வெண்ணி நமதுகண்ணென்று சொல்லப்பட்ட தலைவர் நம்மைமத் தேடிவர நம் அன்னையானவள் நித்திரையை யடைந்துர், துண் என்னுங் கொடியகுர லெழும் வாயையுடைய நாய்க்கூட்டங்கள் குரைப்பதினால் நம்மன்னை தூக்கம் பெறுளே ! என்பதாம்.

என்னுமாறுச் சிந்தையுற்றவர்களாகி, தூக்கத்திற் கென்றாக்கிய இரவை ஏக்கத்துக்கிரையாக்கி அப்படியே சம்போகிக்கும் இன்பம் காற்பங்காகவும் பயங்கலந்த துன்பம் முக்காற்பங்காகவும் கலந்த சுகத்தை யநுபவித்து இடையில் நேராது நேர்ந்த இடையூறுசளுக்குத் தப்பியதையும் தங்களுக் குத்தாங்களே மெச்சிப் புகழ்கொண்டாடி பின்னால் நேருங் கஷ்டங்களை யறி யாமற் சந்தோஷிக்கிறார்கள்.

(தொடரும்)

பா. முனிஸ்வாமி.

களவழி நாற்பதுரை.

(44 - ம் பக்கத் தொடர்ச்சி)

மேலோரைக் கீழோர் குறுகிக் குறைத்திட்ட
காலார் சோடற்ற கழற்கா லிருங்கடல்
ஊணில் சுறாபிறழ்வ போன்ற புனலுடன்
நேராரை யட்ட களத்து.

(பொ-ரை.) நீர்நாட்டையுடைய செங்கட்சோழன் பகைவரைக்கொன்ற போர்க்களத்தில், குதிரைமுதலாயினவற்றின் மேலிருந்தவரை கீழ் நின்ற காலாட்கள் சென்று சார்ந்து துணித்த கார்கிட்ட கவசத்தோடு அறுபட்ட வீரகண்டையணிந்த கால்கள் பெரியகடலுள் இரையில்லாத சுறாமீன்கள் பிற ழ்தலையொத்தன.

(வி-ம்.) இங்கே செங்கட் சோழனது போர்க்களம் பெரிய சமுத்திரம் போல உதிரத்தாற் சூழப்பட்டிருந்ததெனவும், பகைவருடைய வீரகண்டை யணிந்த கால்களைச், சோழனது காலாட்படைகள் சென்று துணிக்க அவ் வீரகண்டைகளை யணிந்த கால்கள் பெரிய சமுத்திரத்தில் இரையில்லாத சுறாமீன்கள் புரள்வதைப்போன்று இவ்வுதிர வெள்ளஞ்சூழ்ந்த சமுத்திரத் 9.
தினிடத்து புரள்வதாயினவெனக் குறிப்பிடப்பட்டது.

பல்கணை யெவ்வாயும் பாய்தலிற் செல்கலா
தொல்கி யுயங்குங் களிறெல்லாந்—தொல்சிறப்பிற்
செவ்வலங் குன்றம்போற் றோன்றும் புனலுடன்
தெவ்வரை யட்ட களத்து.

(பொ-ரை.) நீர் நாட்டையுடைய செங்கட்சோழன் பகைவரைக்கொன்ற போர்க்களத்தில் ; பல அம்புகளும் எவ்வுறுப்பிலும் பாய்தலால் செல்லமாட் டாது தளர்ந்து, வருந்தியயானைகளெல்லாம் தொன்று தொட்டு வருஞ்சிறப் பினையுடைய மேருமலைபோலத் தோன்றா நிற்கும்.

(வி-ம்.) இங்கே செங்கட் சோழனது போர்க்களத்தில் வந்த பகைவர் யானைகளின் சர்வவுறுப்புகளினும் விசேஷமான அம்புகள் பாய்தலால் அவ்வியானைகள் நடைதளர்ந்து ஸ்மரணையற்றுக் கிடப்பதானது, உருவத்திலும் பெரிதென மதிப்பைச்சூடிய மேருமலையை யொத்திருக்குமெனக் குறிப்பிட்டார்.. 10.

கழுமிய ஞாட்பினுண் மைந்திகந்தா ரிட்ட
வொழிமுரச மொண்குருதி யாடித்—தொழின்மடிந்து
கண்காணா யானை யுதைப்ப விழுமென
மங்குன் மழையி னதிருமதி ராப்போர்ச்
செங்கண்மா லட்ட களத்து.

(பொ-ரை.) போரிற் கலங்குதலில்லாத செங்கட்சோழன் கொன்ற போர்க்களத்தில்; நெருங்கிய போரில் வலியிழந்தவர்கள் போகவிட்ட வொழிந்தமுரசம், ஒள்ளிய வுதிரத்திற்படிந்து தம்தொழிலைத்தவிர்ந்து ஆயுதங்களாலூறுபட்டு கட்புலனிழந்த யானைகளுதைத்தலால் இழுமென முழங்கும் மேகம்போல முழங்காநிற்கும்.

(வி-ம்.) இங்கே சோழனை போரிற் கலங்குதலில்லாத மனத்தினை யுடையவனென்றும், இவனது போரிற்பட்டபகைவர்கள் தமது வல்லமையை யிழந்து, தமது கையிலுள்ள முரசமென்னும் வாத்தியத்தைநழுவிவிட்டுவிட அம்முரசம் உதிரவெள்ளத்தோடு புரண்டுச்செல்ல; அம்முரசம், ஆயுதங்களாற் கண்ணிழந்த யானைகள் கால்பட்டு, மேகம்போல் இழும் எனுஞ்சத்தத்தோடு முழங்காநிற்குமென்றுங் குறிப்பிட்டார். 11.

ஒவாக் கணைபாய வொல்கி யெழில்வேழந்
தீவாய்க் குருதி யிழிதலாற் செந்தலைப்
பூவலங் குன்றம் புயற்கேற்ற போன்றனவே
காவிரி நாடன் கடாய்க் கடிதாகக்
கூடாரை யட்ட களத்து.

(பொ-ரை.) காவிரி நாட்டையுடைய செங்கட்சோழன் முயன்று விரைந்து பகைவரைக்கொன்ற போர்க்களத்தில்; இடைவிடாமல் அம்புகள்தைக்க தோற்றத்தையுடைய யானைகள் தளர்ந்து தீநிறம்பொருந்திய வுதிரத்தை யொழுக்குதலாற் பூமியின்கண்ணுள்ள செந்நிறமுள்ள சிகரத்தையுடையசெம் மண்மலைகள் மழைக்கு எதிர்ந்தனவொத்தன.

(வி-ம்.) இங்கே காவிரிநாட்டையுடைய செங்கட்சோழன் போர்க்களத்தில் முயன்று, விரைந்து செல்பவனென்றும், இவனது போர்க்களத்தில் இடைவிடாமல் அம்புகள் தைப்பதால் யானைகள் உதிரத்தை யொழுக்குதலானது;—செம்மண்மலையிற் பெய்தமழைபோல் தோன்றா நிற்குமென்றுங் குறிப்பிட்டார். (அதாவது) செம்மண்மலையிற்பெய்த மழை செந்நிறமாக வோடு மாதலின், உதிரம் ஒழுகவிடும் யானைகள் அம்மலைகளை யொக்குமென்றார். 12,

தொடர்ச்சியுண்டு

தமிழுழவன்.

நீதிசாத்திரம்.

(49-ம் பக்கத்தொடர்ச்சி.)

உடலிற் றலைதலையா மோங்குறுப்பிற் கண்ணும்
விடலில் சுவையிலுவர் மேவுங்—கடலிற்
பெரிதாகுங் கண்ணாய் பெருகுநன் னீரே
யரிதாமோ ராற்றுக் கறி.

குடம்பல மண்ணொன்றுங் கோப்பலபா லொன்று
முடன்மே லணிபல வொன்று—மிடும்பொன்
னமையும்பன் னூல்க ளறையுமிறை யொன்றே
சமயம் பலவினுக்குந் தான்.

வள்ளல்வறி யோனு வ்ழங்கான் வளவனு
எள்ளும் பதகனைப் பேசுதயார்க்—கொள்கலையி
னல்லோனுள் சின்னுளா நாயகனே ரூழியனுப்
புல்லோ னாசாகிப் போம்.

கோளரி மூன்றுக் கொடுவரியைந் தாம்பரமூா
நீளுற வீன்று நிலவா மறத்தால்
அறத்தாலொன் றீன்றுமிங் காவோ பலவால்
திறத்த தறமே தெளி.

பொருணசை யோர்க்குற்றூர் போதகுரு வில்லை
வருகாமிக் கில்வெட்க மானங்—தருகல்வி
தோய்வோர்க் கிலைசுகமுந் துஞ்சல் பசித்தோர்க்
கேய்சுகமும் பக்குவமு மில்.

காதன் மனையாளைக் கையகற னல்லோர்நெஞ்
சேதம் படநிற்ற லெய்துகடன்—கோதார்
குலத்தானைக் காண்டல் கொர்டுவறுமை யிற்சார்
நலத்தானுங் கொல்லா நமன்.

பொத்தகமுங் கன்னி பொருளும் பிறர்தம்மா
லுற்றிடிற் போயினவென் றுன்னுகவே—பெற்றூற்
கிழிந்து நலனற்றுங் கேடுற் றரிதிற்
கழிந்தும் பெறவருமாங் காண்.

ஐயாண்டு காறு மரையனு வாண்டுகள்
ஐம்மூன்று காறு மடியனு—வெய்ததன்மேன்
மித்திர னுக்கொண்டு மேவுக தாமீன்ற
புத்திரனை யன்பு புரிந்து.

காலைவெயி னிற்றற் கடும்பிணத்தின் றாமமுறல்
சாலப் பெரியானைச் சார்தல்—ஆலமதை

யாக்குநீ ருண்ணலிவை யாங்கொடுநோ யானுஞ்
நீக்குமா லாயு ணிலை.

மாலைவெயி னிற்றல் வளரிட்டித் தூமமுறல்
வாலைச் சிறுவியை மன்னுதல்—சீலத்
துறுநீர் பருகலிவை யோங்குபிணி நீக்கி
திருவுமா லாயு ணிலை.

கா. ந. முதலியார்.

வேல்ஸ் இளவரசர் விஜயம்.

"வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக" "மன்னு நின்வரப் புயர்க" என்னும் பெரியோர் மொழிப்படி மாரிபெய்யவும், அதனால் பயிர்கடழையவும், அவையால் வரப்புயரவும் வரப்புயர்ந்தால் குடிகளுயரும் குடிகளுயர்ந்தால்செங் கோலுயரும் என்பது கொண்டு நமதுசக்ரவர்த்தியாரும், இளவரசரும், இளவரசியாரும், ஆட்சியும் நீடுவாழ்க கடவுள் கிருபை புரிவாராக.

கடந்த 1850ம் வருடமுதல் இவ்விந்தியாவைக் கைப்பற்றியாண்டுவந்த [illegible] மகாராணியார் காலத்தில் இளவரசரா யிருந்ததற்போதிய எட்வர்ட் மகாராஜா அவர்கள் 1875ம் வருடம் இந்தியா முழுமையுஞ் சுற்றுப் பிரயாணஞ்செய்து மனங்களித்து தஞ்சுதேசஞ் சென்றனர். நமது ராணியார் மரணத்தின் பின்னர் தாம்சுற்றிவந்த இந்தியாவுக்கு சக்கிரவர்த்தியானார். அதுபோன்று எட்வர்ட் மகாராஜாவின் அரசாக்ஷிகாலத்தில் அவரது புத்திரரும், வேல்ஸ் மாகாணத்தி னதிபருமாகிய இளவரசர் இந்தியா முழுமையுஞ் சுற்றிப்பார்க்க வந்திருக்கின்றனர். இவர் வந்த இவ்வருடம் 1905. இவர்தந்தை வந்தவருடம் 1875. இவைகளுக்கொன்றுக்கொன்று சரியான இலக்கமாகவும் 30 வருடங்களிடையிலுள்ளனவாகவு மிருப்பது விகஜிதமே. இவ்விளவரசர் தம்பத்தினியாருடன் ரினௌன் என்ற ஊர்ஜிதமரக்கலமேறி கடந்த மாதம் 9-ம் தேதி பம்பாய் சேர்ந்தார்கள். பீரங்கிவேடிகள் சப்தித்தன. இவர்களிறங்கிசற்று தங்குவதற்கு அமைத்திருந்ததின் பந்தர் சிறப்பு பகரக்கூடியதல்ல. அநேக ஆபிரஞ்சனங்கள் காலைமுதல் இடைவிடாது கூடிநின்றார்கள். சுதேசமன்னர்களும் லார்ட்கர்சனும் லேடிகர்சனும் ஏனைய பிரபல்யர்களும் ஒருங்குகூடி அழைத்து வந்தனேபசாரப் பத்திரிகை வாசித்தார்கள் சகல மன்னர்களும் கிரமப்பிரகாரம் பேட்டி பெற்றார்கள். மறுநாள் 10உ காலை 10-மணிக்குப் புகைப்பட மெடுக்கப்பட்டார்கள். மாலை 4½-மணிக்கு இளவரசர் பம்பாய்வீதிகளில் பவனிவந்தார். கனவான்களையும் மற்றும் பரிவாரங்களையும் கண்டுகளிப்புற்றார். 11உ சனிக்கிழமை இளவரசரும் இளவரசியாரும் தங்களைவந்துகண்ட மன்னர்களைத் திரும்பச்சென்றுப் பார்த்தார்கள். கோலாப்பூர் மகாராஜாமுதல் பேட்டிபெற்றார். அவருடைய மாளிகை வெகு உன்னதமாக அலங்கரிக்கப்பட் டிருந்தது. மியூஜிய கட்டடத்திற்காக அஸ்திவாரக்கல் நாட்டினர். அச்சமயம் ஜனங்களின் ஆரவாரங்கள் அளவிட்டுச் சொல்லப்படாது. இந்தியமாதர்கள் பிற்பகலில் நகரமாளிகையில் இளவரசியாருக்கு வந்தனபத்திரம் வாசித்தார்கள். அழகிய சிம்மாதனத்திருத்தி இந்தியமாதர்கள் பலவிதமான ஆலத்திசுற்றினார்கள் இந்தியசடங்குகள் செய்யப்பட்டபோது இளவரசியார் மிக மனதுவந்தார்கள். இவை திருஷ்டி கழிப்பாம். கபூர்ச்சண்டென்னும் ஒரு பெரிய முத்துவர்த்தகரின் மனைவியார் ஏராளமானமுத்துகளைக் கொண்டு முத்தாலபிடேகஞ்செய்தது மிக்க விந்தையாயிருந்தது. இரவு கவர்ன்மென்ட் அவுஸில் உண்டாட்டுக்கொண்டாட்டம் நட

ந்தது. ஆதிவாரம் கோவிலுக்குச் சென்று ஒழிந்திருந்தார். திங்கட்கிழமை
டாக்குவுக்கு அஸ்திவாரக்கல் நாட்டினார். அன்றிரவு பைக்காலா கிளப்பில்
பாலாட்டம் நிகழ்ந்தபோது பிரசன்னராயிருந்தார்கள். செவ்வாய்க்கிழமை
யன்று சில சுதேச மன்னர்களைச் சந்தித்தார். சிலருக்கு கௌரதா பட்டங்க
ளளித்தார்கள். பிற்பகலில் யானை குகைகளுக்குச் சென்று விருந்துண்டார்
கள். ஸர்பிரேஸிஷாமேடா இந்தியர்களுக்குத் தலைமையானவரென அறிந்து
கொண்டார்கள். இளவரசியாரின் திருவுருவப்படத்தில் ஆல்பனல்மேடாவின்
கையெழுத்துவாங்கப்பட்டது மிகவும்சிலாக்கியத்தைக்காட்டுகிறது. ஜெயப்பூர்
மகாராஜாவைச் சந்தித்தபோது அவர் தம்முடைய ராஜரீகக்கத்தியை இள
வரசரின் பாதத்தில் வைத்துப் பணிந்தார். ஜயப்பூரில் முதல் முதல் புலிவே
ட்டையாடினார். அவர் சுட்டுக்கொன்ற புலியைக்கண்டு இளவரசியார் பிரமித்
தார்கள். ஜயப்பூர்விட்டுப் பிரயாணமாகி பிக்கானீர் போய்ச் சேர்ந்தார்கள்.
பிக்கானீர் மகாராஜா பலவகைப் படைகளுடன் பிரசன்னமானார். பிக்கானீர்
நகரம் ஈட்டிபபடையாராலும் ஒட்டகப் படையாராலும் அணிவகுத்து நிற்க
பிரமிக்கத்தகுந்ததாக இருந்தது. இளவரசியாரும் இளவரசரும் லால் கார்
மாளிகையில் மகாராஜாவைக் கண்டார்கள். பிக்கானீருக்கு இருபது மைல் தூர
த்திலுள்ள கூஜ்னர்க் குளத்தில் பக்ஷி வேட்டையாடினார் இளவரசர். இவரு
டன் பிக்கானீர் மகாராஜாவும் வேட்டையாடினார். இளவரசர்207 பக்ஷிகளையும்
மகாராஜா 109 பக்ஷிகளையும் சுட்டார்களாம். இவைகளுடன் ஒரு முயலும்
சுடப்பட்டது. பன்றிவேட்டையாடப் பட்டபோது ஓர்பன்றி வெகு உக்கிர
மாகப் போர்செய்ததைக்கண்டு களித்தார். அடுத்த போது இளவரசரும்
இளவரசியாரும் லாகோர் போய் சேர்ந்தார்கள். லெப்டினென்ட் கவர்னர்,
ஐகோர்ட் ஜட்ஜி முதலானவர்கள் எதிர்கொண் டழைத்து வந்தன பத்திரம்
வாசித்தார்கள். இளவரசரும் பதில்சொன்னார். இராஜவிருந்துநடந்தேறியது
இலாகோர் பஞ்சாப்பின் தலைநகரம் பாஞ்சால தேசமும் இதுவே. இங்கு
வைக்கப்பட்டிருந்த ராணுவப்படைகளைக் கண்டு அகமகிழ்ந்தார்கள். பஞ்சா
ப்படைகள் பின்தொடர நாலுகுதிரைகள்பூட்டிய வண்டியில்பிரயாணஞ்செய்
தார்கள். பலமன்னர்களும் வெகு ஜனத்திரள்களும் கூடப்பட்டிருந்தார்கள்,
சுதேசமன்னர்களி னிடையே இவர்கள் சென்றபோது தேவேந்திர கொலுவா
யிருந்தது. சகலரும் மரியாதையாய் வணங்கினார்கள் கபர்த்தலா மகாராஜாவி
னுடைய காலாட்படையார்கள் மிகுந்தகம்பீரத்துடனிருந்தார்கள். பன்னூறு
குதிரைகளும் யானைகளும் திரண்டிருந்தன. பாடியாலா மகாராஜா, பாவல்
பூர்நவாப், ஜிண்ட் தேனகிபதி, நாபாராஜா, கபர்த்தலாராஜா முதலிய பல
மன்னர்கள் பேட்டியானபோது இளவரசர் மிகவும் களித்து அன்பு காட்டினா
ராம். இமையமலைக்குச் சமீபத்திலுள்ள அரசர்கள் ஒவ்வொருவரும் தங்கள்
தங்கள் பரிவாரங்களோடு பேட்டி பெற்றனர்களாம். எச்சிஸன் காலேஜியை
ப்பார்வையிட்டார்கள். சுமார் அன்றிரவு 800 பேர்கள் பிரசன்னயா யிருந்
தார்கள் பாலாட்டம் நிறைவேறியது.

ஸர்மிண்டன் பிளாடின் மனைவியாருடன் இளவரசரும் சர்சார்லஸ்ரா
வைசுடன் இளவரசியாரும் கைகோர்த்தாடினார்கள் வைகறை மட்டும். இரவு
பிஷாவின்நோக்கிப் பிரயாணமானார்கள். ஆங்குள்ள ஜனங்கள் ஆனந்தக்கி
ளர்ச்சியுடன் அழைத்து உபசாரஞ் செய்தார்கள். மகாராணியாரிடத்தும்,
எட்வர்ட் மகாராஜாவிடத்தும் அன்புவைத்திருக்கும் எல்லைநாட்டு வேந்தர்,
ஸிட்டிறல்மாகாணத்தார், டர்மாகாணத்தார், மலைநாட்டு வேந்தர் பேட்டி
பெற்றார்கள், கவர்ன்மெண்ட் அவுஸில் ஒரு தோட்டக்கச்சேரி நடந்தது

பெஷாவர்விட்டு லாண்டி கோட்டால் கோட்டை அதாவது ஆப்கானிஸ்தான் எல்லைக்குச்சென்று பலமலைக்குன்றுகளைக்கடந்து ஜம்ரூட் கோட்டைகுத் திரும்பினார்கள். பெஷாவர்விட்டு ராவல் பிண்டிநோக்கிப் பிரயாணமானார்கள். சுமார் 57000-படைவீரர்களும் சேனாதிபதியான லார்ட்கிச்சினரும் பிரசன்னமாயிருந்தார்கள். நான்கு திக்குகளிலும் பல்வகைப்படையாளர் அணிவகுத்திருந்தார்கள். சென்றவீரர்களின் தொகை 55000-பேராம். இளவரசர் பார்த்த எவ்வகைப்படைகளிலும் இது ஓர் பெரியபடை. இரண்டாக விடுக்கப்பட்டு தக்கசேனாதிபதிகளால் நடத்தப்பட்டு போர்புரிந்த காக்ஷியை இளவரசர் கண்டு மகிழ்ந்தார். வடபாக ராஜியச் சேனையில் 30000 - பேர்களும், தென்பாகத்தில் 24250 - பேர்களும் பிரசன்னமா யிருந்து பொய்யுத்தம் நடத்தினார்கள்.

இளவரசரும் இளவரசியாருமேறிவந்த டிரேய்ன் ஹாஸான்-ஆப்-டா என்ற விடத்தில் நிறுத்தப்பட்டது. லார்ட்கிச்சினரிவ்விடத்தில் ராஜகுமாரரைச் சந்தித்தார். இருவரும் குதிரைமீதேறிப் போனார்கள் போர்க்களம். லேடிஷாவ்டஸ்பரியும் இளவரசியாரும் பெரிய யானைமீதேறிச் சென்றார்கள். 12 குதிரைப் படையர்களும் 4 பீரங்கிப் படையர்களும் இப்பொய்ச்சண்டை செய்தார்கள். 5வ செவ்வாய்க்கிழமை சண்டை முடிந்ததும் ராவல்பிண்டி நோக்கிப் பிரயாணமானார்கள். 9வ ஜம்முவுக்குச் சென்றார்கள். பின்னர் காஷ்மீர்மஹாராஜா இளவரசரின் பேட்டிபெற்றார். 6வ புதன்கிழமையன்றும் ராவல்பிண்டியில் ஒரு பொய்ச்சண்டை நடந்தது. அமரிக்கா தேசத்துப் படையைச்சேர்ந்த ஜெனரல் மாக் ஆத்தர்முதல் ஆல்வர் ஜோட்பூர் மகாராஜாக்களும் பிரசன்னமா யிருந்தார்கள். 7வ வியாழக்கிழமை டாஷாலாமாவும் 300 பேருடன் ராவல் பிண்டி சென்று இளவரசரின் பேட்டிபெற்றார்.

8வ வெள்ளிக்கிழமை படைகளையெல்லாம் பார்வை யிட்டார்.

55000 தலைவர்களும் படைவீரர்களும், 13000 குதிரை வீரர்களும், 282 பீரங்கி வகைகளும், சாமான் சரக்கேற்றிச் செல்லும் 15000 மிருகங்களும் நெருங்கி மொய்த்துஆர்ப்பரித்துநின்ற காக்ஷிகள் பிரமிக்கத்தகுந்ததே. ராயல் ஹார்ஸ் ஆர்டிலரிப் படையார் கம்பீரமாக முதலணி சென்றார்கள். இந்திய குதிரைப்படை துப்பாக்கி, கத்தி, ஈட்டி, வேல்களும் தாங்கிய குதிரை வீரர்கள் சீக்கியவீரர், ஆஙகிலேயவீரர், ராஜபுத்திரவீரர், மகமதியவீரர், மாப்பிளைவீரர், கூர்க்காவீரர், அணிவகுப்பு துள்ளிக்களித்து சென்றன. இந்தியப் படைவீரர்கள் மிகவுந் திடதேகிகள் நல்லபயிற்சியுடையவர்களென இளவரசர் கண்டுமகிழ்ந்தார். சனிக்கிழமை 9வ ஜம்முநகரம் போய்ச் சேர்ந்தார்கள். திபேத் சந்நியாசிகள் ஆடிய பேயாட்டத்தைக் கண்டுகளித்தார். ஆதிவாரம் 20000 ஏழைகளுக்கு அன்னமளிக்கப்பட்டது. இளவரசருடன் வந்த பரிவாரங்களுக்குக் கொடுக்க சித்தமாகவிருந்த 5000 ரூபாயை ஏழைகளுக்கு அன்னமளிப்ப இளவரசர்உத்தரவளித்தார். 11வ திங்கட்கிழமை அமிருதசரவில் சேர்ந்தார்கள். தங்கக்கோயிலைப் பார்வையிட்டு அடுத்தநாள் டெல்லிபோய் சேர்ந்தார். அவ்விடமுள்ள பல அற்புதகாட்சிகளை யெல்லாம் பார்த்தார்கள். ஜனவரிமீ 24, 25, 26, 27, 28-ம் தேதிகளில் சென்னையிலிருப்பார்கள் அப்போது இங்குள்ள பிரபுக்களும் ஏனையோரும் அவருக்காக சேர்க்கப் பட்டிருக்கும் திரவியத்திலிருந்து அமோகமான காரியாதிகளைச் செய்து, உல்லாசப்படுத்தி, பிரபுக்கள் வாஸஸ்தானத்தையும் காண்பித்து பிரபுக்களும் பிரசன்னமாவார்கள். அதனால் இளவரசரின் மனம் ஆனந்திக்கும். அதுபோல, இவ்விடத்திலுள்ள ஏழைகளின் சிறுகுடிசைகளையும் ஏழைகளையும் காண்பித்

தல் வெகுநன்மையை யுண்டாக்கும். அப்போதுதான், நமது நாட்டின் நிலைமையை நன்குணர்வார். வரி இறைகளைக் குறைக்க எண்ணுவார். அற்றேல் இவருக்குமுன் சிலர் வந்து போனகாலத்து இராஜ திருஷ்டியில் பஞ்சம் தோன்றினதுபோலாகும். இப்போது ஜனங்களை நெருக்கும் பஞ்சமும் அதிகரிக்கும். சிலபுட்டஞ் சொரியும் கீழ்மாக்கள் நினைப்பதென்ன இளவரசருக்கும் இளவரசியாருக்கும் யாதும் டம்பமாகச் செய்யப்படாது என்பது எமது எண்ணமல்ல. பிரபுதத்துவங்களைக் காட்டுவதுபோல் ஏழைத்தனத்தையும் குறிப்பித்து நம்நாட்டிற்கு நன்றுபுரிய வேண்டியதே கடனாகும். இவ்வாறு, நமது இளவரசரும் இளவரசியாரும் சென்னையில் பிரசன்னமாகுமுன் நமது பத்திரிகையின் இரண்டாவது 3-வதுவருடசந்தா செலுத்தாத அன்பர்கள் தயவுசெய்து அவரது தந்தையாரையாவது, பாட்டியாரையாவது நமதுகையிற் பிரசன்ன மாக்குவார்களென வேண்டுகின்றனம்.

றகர-ரகரபேதவிளக்கம்.

49 ம் பக்கத்தொடர்ச்சி.

குறிப்பு - ஷை பக்கம் 35-வது வரியில், ஆரணியாகிய சிவனென்றிருப்பதை ஆறணியாகிய சிவனெனப் படிக்கவும் - பல அன்பர்கள் எழுதியதற்கிணங்கி சிறுவாக்கியங்களாக எழுதாது, சிறு வார்த்தைகளாக இம்முறை முதலெழுதுவாம்.

ற - ர

அற-நீங்க, மிக, தருமத்தைச்சார்ந்த.
அர-அராவுங்கருவியினுடைய.
அறக்கொடி-தருமக்கொடி.
அரக்கொடி-அரவக்கொடி. (இதில்வ கரந்தொக்கி நின்றது.)
அறமகளீர்-தருமவழி நிற்கும் பெண்களே பெண்கள்.
அரமகளிர் - தெய்வப் பெண்களே பெண்கள்.
அறமகள்-தருமவழிநிற்கும் பெண்.
அரமகள்- இந்திராணி.
அறமனை-தர்மசாலை.
அரமனை-இராஜாமாளிகை.
அறம்-தருமம்.
அரம்-ஓர் கருவி.
அறலை-கருமணலை, நீரை, சிறிதூற்றை
அரலை-கடல், கோட்டை, மால் கழலைக்கட்டி.
அறனிடத்தவள்-தருமத்தினிற்பவள்.
அரனிடத்தவள்-பார்வதி.
அறன்-தர்மம், (போலி அறம்.)
அரன்-அராவு கருவி, (போலி அரம்.)
ஆறகம்-ஆறுவீடு.
ஆரகம்-இரத்தம், பார்வீடு.
ஆறணம்-ஆறு, மேல்வாய்.
ஆரணம்-வேதம்.
ஆறணன்-ஆறு மேல்வாய் (அணன் போலி அணம்.)
ஆரணன்-பிரமன், யாருடைய அண்ணன்-(அணன் அண்ணன்.)
ஆறணி - ஆறுவிதமான ஆபரணம், அழகு, கங்கையை யணிந்தசிவன்.
ஆரணி-காளி, ஓர் நகர்.
ஆறம்பு-ஆறு அம்புகள்.
ஆரம்பு-ஆரவாரம், துவக்கம், போரொலி, யாருடைய அம்பு. [டல்.
ஆறல்-தணிதல், அடங்கல், குணப்ப
ஆரல்-ஆராமீன், கார்த்திகை நாள் செவ்வாய், நெருப்பு, மதில்.
இறங்கு-கீழேவா.
இரங்கு-மனமிரங்கு.
இறடி-கருந்தினை.
இரடி-கால்தவறி
இறத்தல்-சாதல்.
இரத்தல்-யாசித்தல்.
இறந்தோர்-செத்தோர்.
இரந்தோர்-யாசித்தோர்.
இறப்பு-மரணம்.
இரப்பு-யாசித்தல்.
இறவு-இழிந்துவரல், சாதல்.
இரவு-யாசித்தல், இராத்திரி.
இறவுளர்-மரிப்போர், சாவுகின்றோர்.
இரவுளர்-யாசித்தலுடையோர்.
இறவை-ஏணி, கூடை, வினைமுற்று.
இரவை-இராத்திரியை, யாசித்தலை.

(இன்னமுண்டு.)

கடந்தமாதப் பத்திரிகை 41-வது பக்கத்தில் ஜனனப்ரஹடனம் என்னுந் தலைப்பின்கீழ் சபாப்பிரசங்க கோளரிடெனும் பட்டமேன்? என்பதை 50-வது பக்கத்தின் கடைசிவரியாகக்கொண்டு படிக்கவும். பத்—ர்.

கடிதம்

இந்துதேசத்தின் ஏழைமையும் அதின் சிகிச்சையும்.

இந்துதேசத்தின்விசேஷ ஏழைமைத்தனத்தின் முக்கியகாரணம். சம்பாத்திய மில்லாமல்சோம்பலாய் காலப்போக்கடிக்கும் ஜனங்களுடைய பெரியதொகையும் அந்தபெரியதொகையினர் தாங்கள் சம்பாதிக்காமல்இதராளுடைய யாசகத்துக்கும் தயாள முடையவர்களுடைய சம்பாதனைக்கும் எதிர்பார்க்கிறதே. கடசியாக எடுத்த குடிமதிப்பின்படிமேல்கூறிய சோம்பேறிகளின் தொகை 52 லக்ஷக்ஷம். அப்படி யிந்த 52 லக்ஷக்ஷ சோம்பேறிகள் சம்பாதிக்க முனைப்பட்டால் எவ்வளவுபணம் சம்பாதிக்கலாம்.ஒரு சாதாரண இந்துதேசத்தான்மாதம் ரூபாய் 8-விழுக்காடு சம்பாதித்தால் மாதம் ஒன்றுக்கு கோடிரூபாயுக்கு அதிகமாகவும் வருஷ மொன்றுக்கு 50 கோடிக்கு அதிகமாகவும் ஆகப்படும். தற்சமயம் இந்த 52 லக்ஷக்ஷ சோம்பேறிகளைபோஷிக்கமாதம்ஒருவனுக்கு 4 ரூபாய் விகிதம் 2 கோடி ரூபாயும் வருஷத்துக்கு 25 கோடி ரூபாயும் ஆகிறது ஆதலால் வருஷம் ஒன்றுக்கு 75 கோடி ரூபாய்இச்சோம்பேறிகளால் இழந்துபோகிறது. ஆதலால் நாம் இந்த சோம்பேறிகளை இந்த தேசத்துக்கு மாறுக வில்லாமல் அவர்களைச் சம்பாதிக்கும்படியான முயற்சிசெய்து இந்த தேசத்தின் மேன்மையைக் கோருகிறவர்கள் கவனிக்க பிரார்த்திக்கும்.

தி. அன்னபூரணியம்மாள்.

விநோதகூற்று.

இவ்வரிய இந்தியாவுக்கு விஜையமாகும் பிரின்ஸ் ஆவ்வேல்ஸ் இளவரஸரையும், இள வரசியையும் சந்திக்க, திரிகால வர்த்தமானியாகியநாரதமுனிவரும், தன் சீஷர்களாகிய ஒருரை ஏழூராக்கும் கலகபிரியரும், சத்தியமாறி, பொய்யன், கள்ள கும்பிடுக்கார கர்மசண்டாளன்,வெறும் சளுக்கன், வஞ்சகநெஞ்சன், வாஞ்சையற்றோன், பகைவிரும்பி,ஊரைக்குழப்பு முடும்புநாக்கன், நாணமற்ற மீசை முளைத்த பேடிமாக்கள், திருட்டுகாயித மெழுதும் துன்மார்க்கன்,குள்ளக்கள்ளன்முதலான இனதுரோகிகளனைவரையும் வரும்படியாக உத்தரவளித்தார் விநோதகவர்னர்.

வேங்கை-வீரன்.

அதிகாலையிலும், அதிமாலையிலும் சூரின் சிவப்பு நிறமாக காணப்படுவதின் காரணம் யாது ? அன்பர்கள் விளங்கச் செய்வார்களாக.

ஜோ. ஐ. பிள்ளை.

துன்மார்க்கனுக்கு இராஜாங்க—அடி:—பேரூரின்றித் திருட்டுக் கடிதமெழுதியபேடிக்கோ ரெச்சரிப்பு—கடந்தசெப்டம்பர்மீ 20உ யாரோஒருவர் தன் சொந்தப் பெயரை மறைத்துத் துன்மார்க்கனெனத் திருட்டுப் பெயரிட்டுப் பேரூரில்லாக் கடிதமொன்றை யெமக்கனுப்பியுள்ளார். இவரின் குணத்திற்கேற்றவாறு துன்மார்க்கனெனப் பெயரிட்டுக்கொண்டது மெச்சத் தகுந்ததே - யெவரையு மெவ்வளவேனு நிந்தியாமற் பொதுவிற்பேசியவிஷயத்திற்குமாறுகத் துன்மார்க்கனை இவர்மட்டும் வெளிவந்ததேன் ? வாஸ்தவத்திலி

வர் பத்திரிகையின் சந்தாவைச் செலுத்தாமலே ஏனையோர்க்கு வருஞ் சஞ்சிகைகளை சதாமோசஞ்செய்து வந்தவரென வெட்டவெளிச்சமாகின்றது. அன்றியு மிவர் திருட்டுக் கடிதமெழுதத் துணிந்ததேன் ? பத்திரிகையிலெழுதப் புத்திபோதாதாக்கும் - இவர் புத்தியிற் பரமார்த்த குருவின் பிரதம சிடனே. அங்ஙனமெழுதினும் பலத்தின்கண் புழுக்கணெளியுமேனறயசங்கித வார்த்தைகளா வெழுதுவது? இவ்வித வார்த்தைகளைப் புகன்ற இத்துன்மார்க்கனின் வாயை யெந்தவாய்க் கொப்பிடலாம். துன்மார்க்கனை இவரே தெரிந்துக் கொள்ளட்டும். இவ்வித அரோசிக வார்த்தைகளை யஞ்சாமற் பேசிய வாயால் மலத்னைதத் தின்றுற் கேவலமோ ? இனியேனுமிவர் திருட்டுக்கடிதமெழுதியபகீர்த்தி யடையாமற் றன் சொந்தப்பெயரை நாட்டுவதுடன் யாதொரு விஷயத்தையும் பஹிரங்கமாய்ப் பத்திரிகையி லெழுதிவருவாராக. மிலேச்சனும் பேசற்கரிய தூஷணைங்களைப் பேசிய வித்துஷ்டனைக்கு எவ்விதமாய்ப் புத்திப் புகட்டலாம்? அன்றியும் தன்முகத்திலிருப்பது. கோ. கு. உ. யென்பதாய்த் தானுணைத்துக் கொள்வாராயின் முக்காட்டிட்டு மூலையிலிறங்கட்டும் இல்லையேல் வெளிவரின் இராஜங்கத்தார்—அடியுண்டு.

M. R. C. விஜயலிங்கம் பிள்ளை.

முயற்சி.

"பூலோகவியாசன்" பத்திரிகாசிரியருக்கு வந்தனம்:—

கடந்த இரண்டு வருடமாக நடத்திவந்த பத்திரிகைகளைவிட இவ்வருடம் நடத்தும் பத்திரிகையை வாசிக்க மிகவும் மன சந்தோஷத்தைத் தருவதுடன், பார்வைக்கும் இன்பத்தை யூட்டுகின்றது. இது நங்குலத்திற்கும் கல்விவிருத்திக்கும் புதிய வோர் பத்திரிகையாகவே யிருக்கிறது. சந்தாவும் வெகுகுறைந்ததாகவே யிருக்கிறது. இது யான்மாத்திரம் சொல்லுவ தல்ல. இப்பத்திரிகையைப் பெற்று வாசிக்கும் பொறுமையற்ற நல்லோர் யாவரும் சொல்லுவர்ர்கள். நம்மிற் சில அன்பர்கள் இச்சொற்ப சந்தாவைச்செலுத்தி வாங்கிப்படிக்காமல் அனுவசியமாக இரவல் வாங்கிப்படித்து திருப்தியடைகிறார்கள், இவ்வாறு செய்வது மெத்த கேவலம். இப்பத்திரிகையைப் பெற்று வாசிப்பவர்களுக்கு எவ்வளவோ நன்மையுண்டாம். இப்பத்திரிகையை வாங்கும் ஒவ்வொரு அன்பர்களும் சற்றுபிரயாசை யெடுத்து ஒவ்வொரு நபர்களைச்சேர்த்தால், உலோகபகாரமாக நடக்கும் இப்பத்திரிகை மென்மேலும் நீடித்து சல்லிசாகநடக்கும என்பது துணிவு. இவ்வாறு செய்வது பெருமுயற்சியாம், "முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்" என்பது போலும், முயற்சி திருவினையாக்கும் முயற்றின்மை இன்மை புகுத்திவிடும், என்னும் திருவள்ளுவர் திருவாக்கின்படியும் நன்குநடைபெறும்.

சென்னை நுங்கம்பாக்கம் கன்னிமாநகர்

வி. கா. ப. ா. சாரங்கபாணிதாஸ்.

பூலோகவியாசன் பத்திராதிபருக்கு அநேகவந்தனம் இதை இம்மாதம் வெளியிட வேண்டுகின்றேன். ஐயா! சென்ற இரண்டு வருடகாலமாய் தங்களுடைய அருமையான பத்திரிகையை யான் கையாண்டு வருவதில் அதில் அடங்கியிருக்கும் அரிய விஷயங்களையும், ஞான உபதேசங்களையும் ஞானவழிக்கான அரிய போதனைகளையும் இன்னும் பலவிஷயங்களையும் என்புத்திக்கு எட்டியமட்டும் வாசித்தறிந்ததில் மெய்யாகவே இப்பிரபஞ்சத்தில் இது ஒரு அரியநூலாகுமென்று சேர்க்கிறேன். தாங்களறிவித்தபடியே என்னால் ஈன்றபிரயாசை யெடுத்து இவ்வருமையான பத்திரிகையை முன்னுக்கு கொண்டுவரமுயன்று சிலகையொப்ப நேயர்களைச் சேர்த்து கூடிய சிக்கிரத்தில்

அதாவது இரண்டுவாரங்களுக்குள் அனுப்ப சித்தமாய் இருக்கிறேன். இப்படியே இப்பத்திரிகையைக் கண்ணுறுக்கும் ஒவ்வொரு புண்ணியவான்களும் பற்றுமுள்ள கயொப்பநேயர்கள் ஒவ்வொருவரும் பிரையாசை யெடுத்து முன்னுக்குக் கொண்டு வரும்படி அநேக வந்தனத்துடன் கேட்டுக்கொள்ளுகிறேன்.

S. ஐசிக் - பத்திரிகாநேயன்.
பாம்பே காம்ப் உரிகம்.

சமாசாரக்கொத்து.

சென்னை ராஜதானிமருத்துவ சாலையில் சென்றமாதம் 20-ந் தேதி திங்கட்கிழமையோர் இந்தியஸ்திரி மூன்று குழந்தைகளைப் பெற்றனளாம், குழந்தைகளுந் தாயும் சுகமாயிருப்பதாகத் தெரிகிறது.

ஆஸ்டிரியா தேசத்தில் டைரோலியன் சேத்தியக்காரனுகிய ஜோஷன் கர்சு என்பவன் கடன்வாங்கி, ஆஸ்திரியன் தர்மலாட்டரியில் ஒருடிக்கட்டு வாங்கினுன். அவனுல் யாதும் இக்கட்டின்றி 8)000 - பவுண்டான முதல் பிரைஸ் பெற்றுன்.

இவ்வருடம் நவம்பர்மாதம் பம்பாயிலிருந்து சென்னை நோக்கிவந்த மேனுட்டுத்தபால் எக்பிரஸ்டிரேயினில் ஷா என்னும் பையர்மேன், ஆதோனிக்கடுத்த ஆஸ்பரி என்னும் ஸ்டேஷனில் லையின் கிளியர் டிக்கட்டுவாங்கும்போது, வண்டியின் வேகத்தால்தவறி இஞ்சினிலிருந்து கீழேவிழுந்துவிட்டார், தலை, முகவாய்க்கட்டைபினனும்பல விடங்களில் அதிகமான காயம்பட்டது. உடனே டிறைவர்உண்டியை நிறுத்திகாயம்பட்ட பயர்மேனை எடுத்து வளர்த்திக்கொண்டு குத்திஆஸ்பரித்தியிலிட்டார். குத்தி ரயில்வே ஆஸ்பத்திரியில் சிகிச்சைசெய்யப்பட்டுவருகிறதாக தெரியவருகிறது.

இம்மாதம் 4-ம் தேதி சென்னை ஆர்பரில் கூர்கா என்னும் ஸ்டீமரில் குதிரைகளை இறக்குமதி செய்கிறகாலத்தில் ஆட்களுக்கு உதவி செய்துக்கொண்டிருந்த நான்காவது ஆபீசராகிய மிஸ்டர் கர்டிஸ் வில்சன் என்னும் துரைமகன் அகஸ்மார்த்தாய்த் தவறி கடலில் விழுந்தார். உடனே எவ்வித உதவியும் செய்வதற்கு முந்தியே அங்கு மேய்ந்திருந்த சுறுமீன்களால் கொண்டுபோகப்பட்டார் பிரேதம் கண்டுபிடிக்காமல்போனதும் வினசமே.

டில்லி மார்வாரி ஜாதியார்கள் தங்களுக்குள்ளாக 5000-ரூபா சேர்த்து ஒரு சுதேசி கம்பெனி ஏற்படுத்த நிச்சயித்திருக்கிறுர்கள். இதுநன்றுய்நடைபெற்றுல் 10-லக்ஷம் ரூபா முதல் வைக்கிறதாய் யோசிக்கிறுர்கள். சியால்கட் பட்டணத்தில் சர்க்கரையானது எலும்பினுலும் மாட்டு இரத்தத்தினுலும் சுத்திசெய்யப்படுகிறது என்று எழுதியிருக்கிற நோட்டீசு எங்கே பார்த்தாலும் பரவியிருக்கிறது. ஹிந்துக்களும் மகம்மதியர்களும்சியால்கட்டில் 50000 ரூபா முதல் வைத்து ஒரு சுதேசி கம்பெனி ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. 5000 ஷேர்களாக பிரிக்கப்பட்டிருக்கிறது. ஒரு ஷேரின்விலை 10-ரூபா எல்லோரும் சுலபமாய்ச் சேரலாம்.

'மைசூர் ஹேரால்டு' என்னும் பத்திரிகையானது, சமஸ்தான உத்தியோகஸ்தரொருவரைப்பற்றி எழுதுகிறது:—"வெங்கடவரதய்யங்கார் குற்றமற்ற உத்தியோகஸ்தர். உத்தியோக நல்லொழுக்கத்திற்கு விளக்கு போன்றவர். அவருடைய நல்லொழுக்கம் மிகச்சிறந்து பூரணத்வதை அடைந்திருக்கிறதென்றே சொல்லவேண்டும். சொந்த கடிதங்களை எழுதுவதற்கு கச்சேரி இங்கியைக்கூட உபயோகப் படுத்துகிறதில்லை. ஒருசமயம் பணம்கொடாமல் இனமாய் வாங்கின காய்கறி சமைத்ததற்காக தன்னுடைய சமையற்காரனை வேலையினின்று நீக்கிப்போட்டு தானும் ஏதோ ஒரு மருந்து உட்கொண்டு